# தமிழரசு செயற்குழுவில் காரசாரமான விவாதம்

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU


தேசியதினசரி National Tamil Daily
மலர் 8 (31-8-66) இதழ் 201
பராபவ ஆவணி 15 ஜ: அவ்வ 14 புதன்கிழமை

## நாகநாதன் செயலுக்கு ஆதரவும் எதிர்ப்பும்?

திருக்கோணமலை, செவ். தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று திருக்கோணமலை எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராசாவின் இல்லத்தில் நடைபெற்ற போது உயர்கல்விமசோதா, தமிழ்மொழிச்சட்ட விதிகள் அமுல் ஆகியவைபற்றி காரசாரமான விவாதம் நடைபெற்றதாக அறியப்படுகிறது. அந்தரங்கமாக நடைபெற்ற இக்குழுக்கூட்டத்தில் முக்கிய அங்கத்தவர்கள் சிலர் கலந்து கொள்ளவில்லை. இவர்கள் வரத்தவறியதற்காகவும் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. ஜனப்பிரதிநிதிகள் சபையில் உயர் கல்வி மசோதாவுக்கு எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த திருத்தப் பிரேரணைகளை ஆதரித்தோ எதிர்த்தோ வாக்களிக்க டாக்டர் நாகநாதன் மறுத்ததை குழுவில் அங்கத்தவர் சிலர் பாராட்டியதாகவும் வேறுசிலர் எதிர்த்ததாகவும் அறியப்படுகிறது.

முஸ்லிம் பல்கலைக்கழகம் வேண்டுமெனக்கோரும் மூதூர் முதல் எம். பி. ஜனாப் முகம்மதலிமீது என்னவிதமான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதென்பது பற்றியும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தமிழ்மொழிச்சட்ட விதிகள் சரியான முறையில் இன்னும் அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படாததற்காக பலர் பலத்த கண்டனம் தெரிவித்தனராம்.

விரைவில் பொதுச்சபையைக்கூட்டும்படி கேட்பதென செயற்குழு தீர்மானித்ததாகவும் அறியப்படுகிறது.



நல்லூர்க் கந்தசாமி கோயில் பத்தாந் திருவிழாவான நேற்று முத்துக்குமார சாமிப் பெருமான் மஞ்சத்தில் வீதிவலம் வந்து அடியார்களுக்குக் காட்சி அளித்தார்

## யாழ். திறந்த வெளி அரங்கின் குறைபாடுகள்

### அரசாங்க அதிபர் சுட்டிக் காட்டுகிருர்

யாழ்ப்பாணம், செவ், இலங்கையில்நாடகக்கலைக்கான மேடை அமைப்புக்கள் மற்ற நாடுகளுடன்ஒப்பிடும் போது தரம் குறைந்தவையாகவேஇருக்கின்றனஎன்று நேற்று முன்தினம்யாழ்ப்பாணத்தில் முடிவுற்ற யாழ்ப்பாண பிரதேச கலாமன்றத்தின் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைவகித்த வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா கூறினார்.

யாழ்ப்பாணம் திறந்த வெளிஅரங்கின் குறைபாடுகளை எடுத்துக்காட்டிய அரசாங்க அதிபர் அடுத்த கலைவிழாவுக்கு முன்பதாக யாழ்ப்பாணம் திறந்த வெளிஅரங்கு நவீன வசதிகள் கொண்டதாக விளங்குமென்று நம்பிக்கை தெரிவித்தார்.

மன்றம்நடாத்திய போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் திருச்செல்வம் வழங்கினார். மந்திரியை வரவேற்றுப்பேசிய அரசாங்கஅதிபர் "கலைகள் வளரவேண்டுமானால் அதற்கு சிறப்பான விமரிசனம் தேவை. விமரிசனம் ஆக்கரீதியாக அமைய வேண்டும். அப்பொழுது தான் கலைஞர்களின் திறமைகள் சிறப்பாக வெளிவருவதற்கு வழியேற்படும்" என்ருர்.

யாழ்பிரதேசக்கலைமன்றம் நடத்தும் கலைவிழா எதிர்காலத்தில் தென்னிலங்கையிலிருந்தும் கலைஞர்களையும் பார்வையாளர்களையும் ஈர்க்க வேண்டும்என்றுகுறிப்பிட்ட அரசாங்க அதிபர் வெளிநாடுகளிலிருந்தும் பார்வையாளர்கள்இந்தவிழாவுக்கு வரக்கூடிய நிலைமை உருவாக வேண்டுமென்றும், அப்படியான நிலைமை உருவானுல் ஆங்கில நாட்டில் எடின்பரோ நகரில் நடைபெறும் கலைவிழாவுக்கு ஒத்ததாக அமையுமென்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் யாழ். பிரதேசக் கலை மன்றத்தின் வளர்ச்சியைப் பற்றியும் அது நிறைவேற்றியுள்ள சாதனைகளைப்பற்றியும் விளக்கினர்.

### நான்கு வருட கடுழியம்!

திருக்கோணமலை, செவ். நீதியரசர் திரு. வி. எஸ். பெர்னண்டோ, மார்க்கண்டு ராஜரத்தினம் என்பவருக்கு நான்கு வருட கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

காளிமுத்து குழந்தைவேலு என்பவரைக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த வழக்கிலேயே இவருக்கு இப்படியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது

# பழைய ஊழியருக்கு சிங்களம் கட்டாயமில்லை

## எந்நேரத்திலும் ஓய்வு பெறலாம்

### திறைசேரி அறிக்கை விரைவில் வெளியாகும்

— நமது நிருபர் கே. நடராஜா —

கொழும்பு, செவ். 1956-ம் வருடத்துக்கு முன்னர் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்கள் உத்தியோக மொழியில் (சிங்களத்தில்) தேர்ச்சிபெறுமாறு வற்புறுத்தப்படமாட்டார்கள். உத்தியோகமொழியில் தேர்ச்சிபெருத காரணத்தினுல் நிறுத்தப்பட்டிருந்த இவர்களது சம்பள உயர்வு மீண்டும் வழங்கப்படும்.

விரைவில் திறைசேரியிலிருந்துவெளியிடப்படவிருக்கும் அறிக்கையொன்றில் இவை அடங்கியிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பழைய ஊழியர்கள் தாம் விரும்பும் எந்த நேரத்திலும் சேவையிலிருந்து ஓய்வு பெறலாம். இந்த ஒய்வு வைத்தியகாரணமான ஒய்வாக இருக்கும் இவர்களது சேவையில் 5 வருடம் கூடுதலாக கணிக்கப்படும். இவர்கள் தமது 55-வது வயதில் கட்டாயமாக வேலையிலிருந்து ஓய்வுபெறவேண்டும். தமது சேவையை நீடிக்க விரும்பினுல் உத்தியோக மொழியில் தேர்ச்சிபெற வேண்டும்.

1956-ம் வருடம் ஜுலை மாதத்துக்குப்பின்னர் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்கள் ஜே. எஸ். ஸி. வகுப்பு வரையான சிங்கள தகுதி நடைமுறையில் பெற வேண்டும். இத்தகுதியை இவர்கள் பெறுவதற்கு மூன்று வருட அவகாசம் கொடுக்கப்படும்.

புதிதாக அரசாங்கசேவையில் சேர்பவர்கள் 'கசட்' அறிவித்தலுக்கேற்ப உத்தியோக மொழியில் தகைமை பெற்றிருக்கவேண்டும்

1964-ம் வருடத்தில் உத்தியோக மொழிச் சட்டம் காரணமாக ஒய்வு பெற்ற பழைய அரசாங்க ஊழியர்கள் விரும்பினுல் மீண்டும் அரசாங்க சேவையில் சேர்துகொள்ள வாய்ப்பிருக்கும் இவர்கள் தாம் எப்பொழுது அரசாங்க சேவையிலிருந்து ஒய்வு பெற்ருர்களோ அந்த காலத்திலிருந்தநிலையிலேயே மீண்டும் சேர்க்கப்படுவர் பல தமிழ் எம். பி. க்கள் பிரதமரிடம் இவர்களது பிரச்னைகள் பற்றி எடுத்துக் கூறியதன் விளைவாகவே இவ்வித வாய்ப்பளிக்கப் பட்டதாக அறியப்படுகிறது.

---

### சிலை நாசம்!

ஹொங்கொங் ஆக. 30 தென்சீனவிலிருந்த 'சுதந்திரதேவி' உருவச்சிலையை சீனவில் 'கலாசாரப் புரட்சி' இயக்கத்தில் ஈடுபட்டுள்ள 'செங்காவலர்' படையினர் உடைத்தெறிந்தனர்.

### செல்வச்சந்நிதி உற்சவம் பூர்த்தி

யாழ்ப்பாணம், புதன் தொண்டமனுறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாஉற்சவம் நேற்றுதீர்த்தோற்சவத்துடன்முடிவடைந்தது. பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்து தரிசித்தனர்.

## ஆலைத் தீ குடிசைகளை அழித்தது

கொழும்பு, புதன் சிலாபத்துக்கருகிலுள்ள காக்காப்பள்ளி என்னுமிடத்தில் நேற்று முன்தினமிரவு நிகழ்ந்த தீவிபத்தினுல் தீ விபத்துக்குள்ளான கொப்பரா ஆலை பெரும் சேதமடைந்ததுடன் ஆலைக்கு அருகிலிருந்த பல குடிசைகளும் தீக்கிரையாகின. தீயை அணைப்பதற்காக நேற்று முன்தினம் மாலை கொழும்பிலிருந்து சென்ற தீயணைப்புப்படையினர் நேற்று அதிகாலை 3 மணிக்குத்தான் கொழும்புக்குத் திரும்பினர். இத் தீ விபத்துக்கான காரணம் பற்றி பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## திருமண அழைப்பு

சோமசுந்தரேஸ்வரன் — சாந்திமலர்! அளவெட்டி, கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் ஆதீனம் பிரம்மஸ்ரீ சோ. இராமலிங்கஐயர் அவர்களின் சிரேஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ சோமசுந்தரேஸ்வரசர்மா அவர்களுக்கும் கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் மேலைவீதி பிரம்மஸ்ரீ வை. ஞானசேகர ஐயர் அவர்களின் புத்திரி சாந்திமலருக்கும் ஆவணி மாதம் 17-ந் திகதி (2-9-66) வெள்ளிக்கிழமை பகல் 10 மணி 28 நிமிஷம் தொடக்கம் 12 மணி வரையுள்ள துலாலக்கின சுபமுகூர்த்தத்தில் திருமாங்கல்யதாரணம் மணமகனில்லத்தில் நடைபெறும். நண்பர்கள், உறவினர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 1103

## கல்வி

**விசேஷ ஆங்கில வகுப்புகள்**

ஆங்கில பாடத்தில் யோதிய தேர்ச்சியற்றவர்களுக்காக ஆங்கிலத்தில் விசேஷ வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. ஐக்கிய கலைசாலை. நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1208

## விற்பனைக்கு

**காணியும் வீடும்**

3 பரப்புக்காணி புதுவீட்டுடன் எல்லா வசதியுடனும் விற்பனைக்குண்டு, பாலகிருஷ்ணன் 34-ம் நம்பர் குறுக்கு வீதி, நல்லூர் என்ற விலாசத்தில் நேரே தொடர்பு கொள்ளவும். 897

## காணவில்லை

**திறப்புக்கோர்வை:**

திறப்புக்கோர்வை ஒன்று காங்கேசன்துறைக்கும் யாழ்ப்பாண டிஸ்ரிக் கோட்டுக்குமிடையில் 28-8-66 காலையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்தால் சன்மானம் கொடுக்கப்படும். 1210


**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஸ்ரீகாந் - ஜெயலலிதா
நடித்த
**வெண்ணிற ஆடை**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
சிவாஜி - பானுமதி
நடித்த
**அறிவாளி**

**REGAL—JAFFNA**
NOW SHOWING
YUL BRYNNER
GEORGE CHAKIRIS
in
**KINGS OF THE SUN**
(Pannavision--de Luxecolor)

**இரண்டாவது வெற்றி வாரம்!**

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (சுண்டிக்குளி?) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)



ரி. எம். சௌந்தரராஜன்
பி. எஸ். சரோஜா
எம். ஆர். ராதா, மனோகர்,
சாரதா, லட்சுமி, ராஜம்
மற்றும் பலர் நடித்த
**அருணகிரிநாதர்**


## முரசுமோட்டையில் கலைபிடுங்குவிழா

முரசுமோட்டை, செவ்.

முரசுமோட்டை பழைய கமத்தில் அண்மையில்மாணவர்கள் களைபிடுங்கும் விழாவை யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் ஆரம்பித்துவைத்தார். முரசுமோட்டைக் கிராமசேவையாளர் திரு. என். கந்தையா, முரசுமோட்டை உணவுஉற்பத்தி மேற்பார்வையாளர் திரு. எஸ். பத்மநாதன், பரந்தன் கிராமசேவையாளர் திரு. எஸ். கே. இராசையா, கொலனி அதிபர் திரு. எஸ். செல்வராசா, பரந்தன் காணி அபிவிருத்தி அதிகாரி திரு. சி. தில்லையம்பலம், முரசுமோட்டை இளைஞர் விவசாயக் கழகத் தலைவர் திரு. எம். எஸ். கே. இலட்சுமணர் ஆகியோர் கலந்து கொண்டனர். சுமார் 300 மாணவர் இதில் பங்கு பற்றினர்.

## கைத்தறி நெசவு நிலையம்

குரும்பசிட்டி, செவ்

குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கம் அரசாங்க உதவியுடன்கைத்தறிநெசவு நிலையமொன்றினை நிறுவியுள்ளது. காங்கேசன்துறை தொகுதியில் அமைக்கப்பட்டு வரும் ஏழு நெசவுநிலையங்களில் இது முதலாவதாகப் பூர்த்தியாகியுள்ளது இந்நிலையம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஆகியோரால் செப்டம்பர் மாதம் 7-ந் திகதி உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட விருக்கின்றது.




## கொழும்பு

**செவ்வாய் 31-8-66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைப்பட பாட்டு, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீட்டர்&49 மீட்டர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 1-15 படப்பாட்டுக்கள், 6-15 கிராமிய நிகழ்ச்சிகள், 6-45 ஒலிப்பதிவுகள், 7-30 பக்திப் பாடல், 7-45 பேச்சு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 கண்டி பெரஹரா பற்றிய நேர் முக வர்ணனை, 10-00 பாட்டு-ஜயலக்ஷ்மி சதாசிவம்.


**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30 இரவு 9-30
SOPHIA LOREN
in
**EL CID**
(cinemascope color)


# விளம்பரம்

## கந்தோர்ச் சேவகர் தேவை

இரணைமடு மேற்கு ப. நோ. கூ. சங்கத் தலைவரால் கந்தோர்ச்சேவகர்க்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பகாரர் கந்தோரில் இலிகிதராகவும் கடமையாற்றக் கூடிய தகுதியுடையவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபால்மூலம் 'தலைவர், இரணைமடு மேற்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்'' என விலாசமிடப்பெற்று 9-9-66க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

தராதரம்:- யே. எஸ். சி. (J. S. C.) தராதரப்பத்திரம் பெற்றவர். கூட்டுறவுப் பயிற்சியிருப்பின் முதல் இடம் கொடுக்கப்படும்.

வயது:- 18 தொடக்கம் 25 வரையும்.

பிணை:- உரொக்கம் ரூபா 250-00

சம்பளம்:- ரூபா 90-00 எல்லாம் உட்பட.

இங்ஙனம்,
க. கணேசதாசன்,
நிர்வாகக் காரியதரிசி.

948

## மாட்டுச்சவாரிப் போட்டி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை கிராமமுன்னேற்றச்சங்கஆதரவில் மாபெரும் மாட்டுவண்டிச்சவாரிப்போட்டி சரவணைவடக்கு கடற்கரை 'நாவலர்' மைதானத்தில் நடைபெற்றது.

தீவுப்பகுதியில் இருந்தும் பிற இடங்களிலும் இருந்து வந்த 24 சோடி மாடுகள் இந்தப்போட்டியில் பங்கு பற்றின.

தீவுப்பகுதிக்காரியாதிகாரி திரு. பற்றிக் இப்போட்டிக்குத் தலைமைதாங்கினார். உள்ளூராட்சி உதவி அதிபர் திரு. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார். திருமதி. மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்கினார்.

இவ்வைபவத்தையொட்டி சரவணை வாலிபர் கோஷ்டிக்கும் ஊர்காவற்றுறை பொலிஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கயிறு இழுவைப்போட்டியில் பொலிஸ் கோஷ்டியினர் வெற்றிபெற்றனர்.

வண்டிச்சவாரிப்போட்டி முடிவு; 1. திருச்செல்வம் மயிலிட்டி (தங்கப்பதக்கம் பரிசு) 2. திரு. பொன்னம்பலம் (மூளாய்) 3. திரு. அப்புத்துரை(புளியங்கூடல்)

## வைத்திய அதிகாரி

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புங்குடுதீவு வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றும் டாக்டர் பி. இராசரத்தினத்தை இடமாற்ற வேண்டாம், எனக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று கலட்டிப்பிள்ளையார் ஆலய முன்றலில் நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

திரு. அ. கு. குழந்தைவேலு தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் புங்குடுதீவுவைத்திய அதிகாரியின் மேவையைப் பாரட்டி ஆசிரியர் திரு. குமார், திரு கார்த்திகேசு, திரு. செல்வரத்தினம், திரு. செ. சுப்பிரமணியம் திரு கே. முத்துலிங்கம் ஆகியோர் பேசினர்.

அண்மையில் ராஜாங்க மந்திரி திரு. ஜெயவர்த்தனவுக்கு நடைபெற்ற வரவேற்பின் போதுபுங்கு தீவுகிழக்கு மக்கள் புறக்கணிக்கப் பட்டனர் என்றும் இக்கூட்டத்தில்பிரஸ்தாபிக்கப்பட்டது.

## சைக்கிளில் 5 நாள் பிரயாணம்

பர்மிங்காம், ஆக. 30

செய்யது நவாப் என்ற 24 வயது இந்தியர் சைக்கிளில் ஐந்து நாட்கள் தொடர்ந்து இரவும் பகலும் பிரயாணம் செய்த பின்னர் நேற்று கீழே இறங்கினார்.

அவர் சுமார் 1000 மைல்களை 120 மணி நேரத்தில் சைக்கிளில் பிரயாணம் செய்துள்ளார்.

## மரத்திலிருந்து விழுந்து மரணம்

ஊர்காவற்றுறை, திங்

நாரந்தனையைச்சேர்ந்த மரமேறும்தொழிலாளியான கே. பிலிப்பையா என்பவர் பனை ஏறி ஓலை வெட்டுகையில் தற்செயலாகத்தவறி நிலத்தில்விழுந்து மரணமானார்.

இப்பரிதாப சம்பவம் நாரந்தனையில் செருக்கன் வீதிக்கு அண்மையில் நடைபெற்றது.

ஒரு பனையில் இருந்து அருகிலுள்ள இன்னொரு பனைக்குத்தாவுகையில் தவறி விழுந்தார் என அறியப்படுகிறது.

## பாரதி விழா

கொழும்பு, திங்கள்

இறக்குமதி ஏற்றுமதிக்கட்டுப்பாட்டுதிணைக்களத்தமிழ் இலக்கிய மன்றம் அடுத்த மாதம் பாரதிவிழா கொண்டாட விருக்கின்றது. இந்த விழாவில் தமிழ் நாட்டிலிருந்து தீபம் ஆசிரியர் நா. பார்த்தசாரதி கலந்து கொள்வார் என்று அறியப்படுகின்றது.

## நெசவு நிலையம்

சுழிபுரம், செவ்

அரசாங்கம் தொகுதிவாரியாக ஆரம்பிக்கும் ஏழு புதிய நெசவுநிலையங்களில், வட்டுக்கோட்டைத்தொகுதியைச்சேர்ந்த சுழிபுரம் கிராமத்தில் ஓர்நெசவு நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. சுழிபுரம் மேற்கு பெரியதம்பிரான்கோவிலுக்கு அருகாமையில் அமையும் இந் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

## பனையிலிருந்து விழுந்தார்

சுழிபுரம், செவ்

சுழிபுரம் குடாக்கனையைச் சேர்ந்த சிவல்தொழிலாளி ஐயன் செல்லன் (வயது 45) என்பவர் பனைமரத்திலிருந்து விழுந்து மிகவும்கவலைக்குரிய நிலைமையில் யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நன்கொடை

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் கிராமசபையின் இரண்டாம் வட்டார உறுப்பினரும் இளைப்பாறிய பொறியியலாளருமான திரு. அ. தையல்பாகர், தொல்புரம் கொட்டையாவத்தை ஒழுங்கையைத் திருத்துவதற்கு ரூபா 500 நன்கொடையாக வழங்கியுள்ளார். இப் பணத்தைக் கொண்டு வேலைகள் சிரமதானமுறையில் நடைபெற்றுவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமன்வெல்த் மகாநாடு

# காஷ்மீர் பிரச்னை கிளப்பப்பட்டால் பாரதம் கடுமையாக எதிர்க்கும்

## இந்திய உயர்வட்டாரங்களில் நிலவும் அபிப்பிராயம்

புதுடில்லி, ஆக. 30

அடுத்தமாதம் ஆரம்பமாகவிருக்கும் காமன்வெல்த் மகாநாட்டில் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் இருந்துவரும் பிரச்னைகள் கிளப்பப்பட்டால் இந்தியா அதைக் கடுமையாக எதிர்க்குமென்று இங்கு கருதப்படுகிறது.

காஷ்மீர் பிரச்னையை பாகிஸ்தான் அடுத்த மாதம் 6-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கிளப்புமானால் இந்தியா அதனைக் கடுமையாக எதிர்க்கும் என்று கருதப்படுகின்றது. பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி காமன்வெல்த் மகாநாட்டில் காஷ்மீர் பிரச்னையைக் கிளப்பப் போவதாக சமீபத்தில் ராவல்பிண்டியில் அறிவித்திருந்தார். அதன் காரணமாகவே இப்போது மேற் குறிப்பிட்ட கருத்து அரசியல் வட்டாரங்களில் இப்போது நிலவுகின்றது.

இம்முறை காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கலந்து கொள்ள மாட்டார். அவர் சார்பில் வெளிவிவகார அமைச்சர் சர்தார் சுவர்ண்சிங் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### எல்லைப் பொலிசார் மகாநாடு

நேற்று பாகிஸ்தானையும் இந்தியாவையும் சேர்ந்த எல்லைப் பிரதேசப் பொலிசாரின் மகாநாடொன்று மூன்று மணி நேரம் நடைபெற்றது. எல்லைகளில் கடத்தல் வேலைகளில் ஈடுபடும் கொள்ளைக் கூட்டத்தினரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதுபற்றி அவர்கள் பேசினார்கள். கள்ளக்கடத்தல்பற்றிய பட்டியல்களை இருதரப்பினரும் பரிமாறிக் கொண்டனர். கடத்தப்பட்ட 12 கால்நடைகளைப் பாகிஸ்தானியர் இந்தியாவிடம் ஒப்படைத்தனர். இந்தியரும் 6 கால்நடைகளை அவர்களிடம் ஒப்படைத்தனர். இந்தப் பேச்சுகள் மிகவும் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## ஊதாண்ட என்ன செய்வார்?

நியூயார்க் ஆக 30

ஐ. நா. வின் பொதுக்காரியதரிசி பதவியில் தொடர்ந்து இருப்பதா இல்லையா என்று அடுத்த வியாழக்கிழமை ஊதாண்ட் அறிவிப்பார்

இதுவரை அவரைமீண்டும் பதவியில் இருக்கும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோள்களையெல்லாம் அவர் தட்டிக் கழித்துவிட்டார். ஆனால் கடைசி நிமிடத்தில் அவர் பதவியில் தொடர்ந்து இருக்க ஒப்புக்கொள்ளக்கூடுமென்று கருதப்படுகின்றது. அவர் பதவியில் தொடரந்து இருக்கமறுக்கும் பட்சத்தில் பாதுகாப்புச்சபை விரைவில் கூடி நிலைமையை ஆராயும்.

## யானை குதிரைகளுடன் தி.மு.க ஊர்வலம்

விழுப்புரம், ஆக.30

தென் ஆற்காடு மாவட்ட தி. மு. க தேர்தல் மகாநாட்டையொட்டி 3 யானைகள் 10 குதிரைகளும் கொண்ட பிரமாண்டமான ஊர்வலம் நடைபெற்றது. தலைவர்கள் அலங்கரிக்கப்பட்டதேரில் ஊர்வலமாகச் சென்றனர்.

## 20 ஆயிரம் பெண்கள்

திருச்கி. ஆக'29

திருச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல் மகாநாட்டில் பெண்களே அதிகமாக கலந்து கொண்டனர். சுமார் 20 ஆயிரம் பெண்கள் கலந்து கொண்டதாகக்கருதப்பட்டது.

## அவசர நிலைமை

புதுடில்லி, ஆக. 30

தேர்தலுக்கு முன்னால் அவசர நிலைமையை ரத்துச் செய்யும்படி பார்லிமெண்டில் அங்கத்தவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

# அஸ்ஸாம் வெள்ளநிலைமையில் மாற்றம் இல்லை

## இதுவரை 9 பேர் மரணம்

புதுடில்லி, ஆக. 30

பிரமபுத்திரா நதியிலும் அதன் கிளை நதிகளிலும் சற்று நீர்மட்டம் குறைந்திருந்தபோதிலும் வெள்ள நிலைமையில் இன்னும் மாற்றம் எதுவும் இல்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளின் நிவாரணத்துக்கென நிவாரண நிதியிலிருந்து பிரதமந்திரி திருமதி இந்திராகாந்தி 50 ஆயிரம் ரூபாய் வழங்கியிருக்கின்றார்.

இதுவரை வெள்ளத்தால் 3 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கோபூர், டிராங்டல் பகுதியில் பிரமபுத்திரா நதியில் இரண்டு பேர் மூழ்கி இறந்துபோனார்கள். பீகாரில் 4 பேர் வெள்ளத்துக்கு பலியாகியுள்ளனர். மொத்தமாக இதுவரை 9 பேர் மரணமாகியுள்ளனர்.

இந்த வருடத்தில் வெள்ளத்துக்கு 48 பேர் பலியாகியுள்ளனர்.

# தமிழ் நாடு தேர்தல் களம் சூடுபிடிக்கிறது

சென்னை, ஆக. 30

அடுத்த வருடம் முற்பகுதியில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் குதிப்பதற்கு தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் இப்போது கச்சை கட்டிக்கொண்டு இருக்கின்றன. தேர்தல் பற்றிய விபரங்கள் உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படாது போனாலும் தேர்தல் பிரசாரத்தில் கட்சிகள் எல்லாம் முழு மூச்சுடன் இறங்கியுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள பெரிய கட்சிகளான காங்கிரஸ் கட்சியும் திராவிட முன்னேற்றக்கழகமும் தமது பிரசார இயந்திரங்களை தீவிரமாக முடுக்கிவிட்டிருப்பதால் தேர்தல் இயக்கம் சூடு பிடித்துக் கொண்டிருக்கின்றது.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த முறை எப்படியும் காங்கிரஸ் கட்சியைப் பதவியிலிருந்து இறக்கிவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கின்றது. அதன் தேர்தல் இயக்கப் பகுதியே தலைவர் அண்ணாதுரையிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரா கட்சியுடனும் முஸ்லிம் லீக்குடனும் திராவிட முன்னேற்றக்கழகம் தேர்தல் கூட்டு சேர்ந்திருப்பது தெரிந்ததே. அத்துடன் வேறு சில கட்சிகளும் திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு ஆதரவு அளிக்க முன் வந்துள்ளன. கடந்த தேர்தலில் தி. மு. க. 205 தொகுதிகளில் 142 தொகுதிகளில் போட்டியிட்டு 50 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இந்த முறை எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிட்டு குறைந்தது 100 தொகுதிகளிலாவது வெற்றி பெற அது தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

தி. மு. க.வின் தேர்தல் பயமுறுத்தல் எப்படியிருப்பினும் மீண்டும் பதவிக்கு வருவதில் காங்கிரஸ் கட்சி முழு நம்பிக்கை வைத்துள்ளது. தி. மு. க.வின் தேர்தல் பிரசாரத்துக்கு சற்றும் குறைவில்லாத ஒருபடி அதிகமாகவே அது தேர்தல் பிரசார வேலைகளை ஆரம்பித்துள்ளது திருச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டையொட்டி நடைபெற்ற பிரமாண்டமான 3 மைல் ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

## நேரடித் தொடர்பு

கொழும்பு, செவ்வாய்

தொலைபேசித் தொடர்புகளை 'எக்ஸ்சேஞ்சி' கஷ்டங்கள் இல்லாமல் நேரடியாக பாவனையாளர்கள் வைத்துக்கொள்வதற்கு வசதி செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவில் தந்திஇலாகா மேற்கொள்ளவிருக்கின்றது.

தெ. வியட்னும்

# தேர்தலில் கலந்துகொண்டால் உயிர்களுக்கு ஆபத்து!

## 'வியட்காங்' இயக்கம் பயமுறுத்தல்

ஹனோய், ஆக, 30

அடுத்தமாதம் தென் வியட்னமில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் கலந்துகொள்ளும் சைகோன் பகுதி மக்களின் உயிர்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பு உத்தரவாதமும் கொடுக்கமுடியாது என்று 'வியட்காங்' இயக்கத்தினர் அறிவித்துள்ளனர். இந்த அறிவித்தல் 'விடுதலை வானொலி' என்று குறிப்பிடப்படும் வியட்காங்கியரின் வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது.

வியட்காங்கியரின் இந்த அறிவித்தல் அடுத்த தேர்தலில் கலந்துகொள்ளவிருக்கும் மக்களின் உயிர்வுகளுக்கு எதிரான ஒரு பயமுறுத்தல் என்றே கருதப்படுகின்றது. வியட்காங்கியர் இந்தத்தேர்தலை ஆரம்ப முதலே எதிர்த்துவருகின்றனர். இத் தேர்தல் அமெரிக்கர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

வியட்னமில் ஒரு புதிய அரசாங்கத்தை நிறுவுவதற்கான அரசியல் சாசனமொன்றை உருவாக்குவதற்காக இந்தத்தேர்தல் அடுத்த மாதம் நடத்தப்படவிருக்கின்றது.

### வள்ளங்கள் சுடப்பட்டன

வடவியட்னும் ரோந்து படையைச் சேர்ந்த இரண்டு வள்ளங்களை அமெரிக்க விமானங்கள் சுட்டுத் தள்ளியதாக இன்று அறிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் டொங்கின் பகுதியில் இடம் பெற்றது.

### கம்போடியாவில் டிகால்

பிரெஞ்சுஜனாதிபதி டிகால் சோமாலித்தீவிலிருந்து இன்று கம்போடியா போய் சேருவார். அங்கு அவர் இளவரசர் சிகானுக்குடன் வியட்னும் பிரச்னைகள்பற்றி பேசுவார் என்று நம்பப்படுகின்றது.

### டிகால் — ஜோன்சன்சந்திப்பு

பிரெஞ்சு ஜனாதிபதி டிகாலும் அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனும் விரைவில் சந்தித்துப்பேசவேண்டுமென்று செனட்டர் மென்ஸ்பீல்ட் நியுயோர்க்கில் கூறியிருக்கிறார். காம்போடியாவில் இளவரசர் சிகானுக்குடன் டிகால் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் வியட்னும் அமைதிக்காக நல்ல யோசனைகள் உருவாகலாம் என்று செனட்டர் மென்ஸ்பீல்ட் நம்பிக்கை தெரிவித்திருப்பதாகவும் தெரிகின்றது.

### செஞ்சிலுவை சங்கம் புகார்

வடவியட்னுமின் உள்ள நிலைமைகளை நேரில் கண்டறிவதற்கான ஒரு குழுவை அனுப்புவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு வடவியட்னும் மறுப்பு தெரிவித்துள்ளதாக உலக செஞ்சிலுவை சங்கம் புகார் கூறியிருக்கின்றது.

## சீனவுக்கு அனுமதி வேண்டுமாம்

ஜெனிவா, ஆக. 30

சீனவை ஐ. நா.வில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று 9 நாடுகள் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நாடுகள் சமர்ப்பிக்கும் தீர்மானம் பொது சபையில் விவாதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# சீன இளைஞர் இயக்கம் பயங்கரரூபம் எடுக்கலாம்

## முஸ்லிம் மசூதிகள்பக்கமும் பார்வை திரும்பியுள்ளது

ஹாங்காங், ஆக. 30

பீகிங்கிலும் வேறுபல நகரங்களிலும் சீன இளைஞர்களின் 'சிவப்புகாவலர்' இயக்கத்தின் ஆர்ப்பாட்டங்கள் இப்போது பெருவாரியான எதிர்ப்புகளை சம்பாதித்துக் கொண்டுள்ளது.

ஆபிரிக்க ஆசிய இஸ்லாமிய ஸ்தாபனத்தின் தலைவர் சீனர்களின் இந்த ஆர்ப்பாட்டங்களை பலமாகக்கண்டித்திருக்கின்றார். இந்த இயக்கத்துக்கு எதிராகக் கூட்டு நடவடிக்கையில் இறங்க முன்வரும்படி அவர் இஸ்லாமியர்களை அழைத்திருக்கின்றார்.

'சிவப்புகாவலர்' இயக்கத்தினர் கலாசாரப் புரட்சி செய்வதாகக்கூறிக்கொண்டு கிறிஸ்தவ தேவாலயங்களை தகர்க்கவும் பழைய கொள்கைகளைப் பின்பற்றுகிறவர்களை அடித்துப் புடைக்கவும் தலைப்பட்டனர். இதனை எதிர்த்து கடத்தப்பட்ட ஒரு இயக்கத்தின் காரணமாக எட்டு சிவப்புகாவலர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த இயக்கம் இப்போது [illegible] முஸ்லிம் மசூதிகள் பக்கமும் திரும்பியிருக்கின்றது. பீகிங்கில் மிகப் பெரிய மசூதியொன்றையும் அவர்கள் கைப்பற்றியுள்ளன. மசூதிகளை தொழிலாளர்களின் விடுதிகளாக்கப் போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இவர்கள் முதலில் ரஷ்ய தூவரகத்துக்குமுன் ஆர்ப்பாட்டம் செய்து அத்தூதரகம் இருக்கும் தெருவுக்கு திரிபுவாதிகள் எதிர்ப்புத் தெரு என்றுபெயரிட்டனர்.

சமீபத்தில் சீனவுக்கு விஜயம் செய்த ஜப்பானிய தூதுக்குழுவின் தலைவர் இந்த ஆர்ப்பாட்டங்கள் அமெரிக்காவுடன் சீன நடத்தப்போகும் பெரிய யுத்தமொன்றுக்கு சீன மக்களைந் தயார் செய்யும் நடவடிக்கையாக இருக்கும் என்று கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

பீகிங் தெருக்களில் ஆரம்பமான இந்த இயக்கம் உள்ளூர்களிலும் பரவி இப்போது திபேத்திலும் நடைபெறுகின்றது.

சில காலமாக வெளிநிகழ்ச்சிகள் எதிலும் கலந்துகொள்ளாமல் இருந்துவந்த அதிபர் மாசேதுங் சமீபத்தில் ஸாம்பியா ஜனாதிபதி கமாங்கா, பீகிங் விஜயம் செய்தபோது அவர் வரவேற்பு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். நோய் வாய்ப்பட்டிருக்கிறார் என்று கூறப்பட்ட செய்திகளைப் பொய்ப்பிக்கும் வகையில் மாசேதுங் சமீபத்தில் ஒரு நதியில் 9 மைல் தூரம் நீந்தினார் என்று அறிவிக்கப்பட்டது.

சீனவில் இப்போது நடைபெற்றுவரும் கலாசாரப் புரட்சிஇயக்கம் மாசேதுங் எதிர்ப்பாளர்களைப் பழிவாங்கும் நோக்கமுடையதென்றும் மிகவிரைவில் மாசேதுங் எதிர்பாளர்களில் முக்கிய தலைவர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் அவதானிகள் கருதுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

அந்நியமானது என்பதற்காகவே வெளிநாடுகளில் தயாரான பொருள்களை நிராகரித்துவிடுவதும் இங்கு தயாரிப்பதற்குப் பொருத்தமானதாக இல்லாதவைகளைத் தயாரிப்பதற்காகநாட்டின் காலத்தையும் பணத்தையும் விரயமாக்குவதும் பெருங் குற்றங்களாவதோடு அக்காரியங்கள் சுதேசி உணர்ச்சிக்கே முரணானவையாகும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389

[illegible] பராபவ ஆண்டு ஆவணி மீ 15 உ (31-8-66)

# இலங்கையின் வர்த்தகம்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் செல்லவிருக்கும் தோட்டத் தொழிலாளரினால் இலங்கையின் தேயிலை வர்த்தகத்துக்கு ஏற்படக்கூடிய பாதகம் பற்றியும் இதைச் சமாளிப்பதற்கு இந்தியாவுடன் இலங்கை பண்டமாற்று ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதால் ஏற்படக்கூடிய நன்மைபற்றியும் கோப்பாய் பிரதிநிதி ஜனப்பிரதிநிதிகள் சபையில் சிறந்த யோசனை தெரிவித்துள்ளார். வர்த்தக அமைச்சு இந்த யோசனையைத் தனது கவனத்தில் கொள்ள வேண்டும்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரான ஐந்துஇலட்சத்து இருபத்தையாயிரம்தோட்டத் தொழிலாளர் இன்னும் பதினைந்து வருடங்களுக்குள் இந்தியா திரும்ப வேண்டும். இலங்கையிலிருந்து திரும்பிவரும் இந்தியவம்சாவளியினருக்குப் புனர்வாழ்வளிப்பதற்கான திட்டங்கள்பற்றி இந்திய மத்திய அரசாங்கமும் தமிழ்நாடு அரசாங்கமும் யோசனை செய்து வருகின்றன. இலங்கையிலிருந்து திரும்பும் இந்திய வம்சாவளியினர் இலங்கையின் வருமானத்துக்கு மூலாதாரமாக விளங்கும்இலங்கையின் ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, ரப்பர் செய்கையில் நன்கு அனுபவமும் பயிற்சியுமுடையவர்கள். இலங்கையின் காடுகளை அழித்து கழனிகளாக்கி, நாட்டின் செல்வச் செழிப்புக்குப் பாடுபட்ட பரம்பரையினர்.

உலக சந்தையில் இலங்கைத் தேயிலைக்கும் ரப்பருக்கும் நல்ல கிராக்கியிருக்கிறது. இதேசமயம் இந்தியத் தேயிலையின் மதிப்பும் உலக சந்தையில்அதிகரித்து வருகிறது. இந்தியா மட்டுமல்ல, உலகின் இதர பல நாடுகளும் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இதன் விளைவாக இலங்கையின் தேயிலை விலையில் இப்பொழுது வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது. இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் இந்திய வம்சாவளியினருக்குப் புனர்வாழ்வளிக்கும் திட்டத்தில் முக்கியமானது இந்தியாவிலுள்ள கோடைக்கானல், உதகமண்டலம், அந்தமான் தீவுகள் ஆகிய இடங்களில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்குவதாகும். புதிய தேயிலைத் தோட்டங்கள் உருவாகி, இங்கிருந்து செல்லும் பயிற்சியும் அனுபவமுமுடைய தொழிலாளர் அங்கு குடியேற்றப்பட்டதும் இந்தியாவின் தேயிலை உற்பத்தி அதிகரிக்கும். இலங்கையிலிருந்து முதவில் திரும்பும் தொழிலாளரின் உழைப்பின் பலனை அறிந்ததும் மிகுதித் தொழிலாளரையும் பதினைந்து வருடங்கள்வரை காத்திருக்காமல், அவர்கள் தங்கள் சக்தி முழுவதையும் இங்கேயே செலவிடும்வரை பொறுத்திருக்காமல், விரைவில் திருப்பி அழைத்துக் கொள்ளக்கூடும். இதனால் இந்தியத் தேயிலை உற்பத்தி அதிகரிப்புடன் இலங்கையின் தேயிலை உற்பத்தி குறையும். கள்ளிறக்கும் தொழிலில் இலங்கையருக்குப் பயிற்சியளிக்க எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது ஒன்றே, இந்தியத் தோட்டத் தொழிலாளரின் இடத்தை இலங்கையர் திருப்திகரமாக நிரப்பமாட்டார்கள் என்பதற்கு உதாரணம்.

இந்நிலையில் இலங்கை தனது தேயிலை வர்த்தகத்தை மட்டும் இனியும் நம்பியிருப்பது நல்லதல்ல. எனவே கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப்பிள்ளை பிரதிநிதிகள்சபையில் குறிப்பிட்டதுபோல இந்தியாவில் நல்ல கிராக்கியும் மதிப்பும் இருக்கும் யாழ்ப்பாணத்து மலையாளப்புகையிலை, மலைநாட்டுப் பாக்கு, களிப்பாக்கு முதலிய பொருட்களை இந்தியாவுக்கு அனுப்பி இந்தியாவிலிருந்து ஜவுளிகளையும் இதர தேவைப் பொருட்களையும் இங்கு இறக்குமதி செய்வதற்கு பண்டமாற்று ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவுடன் செய்து கொள்வது விவேகமான செயலாகும். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் தேயிலை உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் நிச்சயம் போட்டியேற்படும். இந்திய வம்சாவளியினர் இங்கிருந்து இந்தியா திரும்பினால் இந்தப் போட்டியில் இந்தியாவுக்கே சாதகமான நிலை ஏற்படும்.

எனவே தேயிலை உற்பத்தியில் மட்டுமல்ல, இந்தியாவிலும் இதர நாடுகளிலும் கிராக்கியும் மதிப்புமுள்ள யாழ்ப்பாணம் புகையிலையையும் தெங்குப் பொருள் உற்பத்தியையும் இங்கு அதிகரிக்க முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இதுவரை இருந்த நிலைமையில் முற்றிலும் மாறுபட வேண்டிய கட்டம் வந்துள்ளது. புதிய நிலைக்கேற்ப இலங்கை அரசாங்கத்தின் வர்த்தக அமைச்சு தனது வர்த்தகக் கொள்கையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டியதுடன் வெளிநாடுகளில் உள்ள எமது தூதரகங்கள் எமது உற்பத்தி ஏற்றுமதிப் பொருள்களை அந்தந்த நாடுகளில் பெருமளவில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டியதும் அவசியம்.

உற்பத்தி வர்த்தகம் ஆகியவைகளில் வகுப்புவாதமோ, குறுகிய அரசியலோ நுழைந்துவிடக்கூடாது. வர்த்தக அமைச்சு உஷாராக நிலைமையை அறிந்து செயலாற்ற வேண்டிய சமயம் வந்துவிட்டது.

ஆசிரியருக்குக் கடிதம்

# பருத்தித்துறைப் பட்டினசபை

27-8-66 'ஈழநாடு' பத்திரிகையின் முன்பக்கத்தில் "பருத்தித்துறைப் பட்டினசபை கலைக்கப்படலாம்" எனப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது மக்களிடையே தவறான அபிப்பிராயங்களை ஏற்படுத்தியுள்ளது. எனவே இதுபற்றிய உண்மை நிலையைப் பொதுமக்களுக்கு உணர்த்துவது எங்கள் கடமையாகும், உள்ளூராட்சித் தலைமையகத்தின் உதவி ஆணையாளரொருவர் 26-8-66-ல் பிற்பகல் நாலு மணிவரையும் இவ்வலுவலகத்திலிருந்து விசாரணை நடாத்திக்கொண்டிருந்தார். அவ்வாறிருக்க பட்டினசபை கலைக்கப்படலாமென்று நம்பப்படுகின்றது என்று அன்றே (26-8-66) செய்தி வெளிவந்துள்ளது.

வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் வந்த ஏராளமான புகார்களைத் தொடர்ந்து ஒரு கொமிஷனரை நியமித்துள்ளதாக அச்செய்தி கூறுகிறது, இங்கு விசாரிக்க வந்தவர்கள் பல புகார்களை கௌரவ ஏழாம் வட்டார அங்கத்தவரொருவரேதான் தந்ததாக விசாரித்தார்களேயொழிய, பல பேர்கள் பல முறைப்பாடுகளைச்செய்ததாகக்கூறவில்லை, ஓர் ஆண்டு காலத்துக்குள் கீழ்க்காணும் ஒன்பதுபேர் காலத்துக்குக்காலம் வந்து விசாரணை புரிந்தனர். ஒன்பதுமுறை விசாரித்தும் எங்கள்சபைதவறாக நடந்துள்ளதென்று உண்மைப்படுத்த முடியாத ஒருவரின் முறைப்பாட்டிற்கிணங்கி திரும்பத் திரும்ப வந்து தங்கள் நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்கிறார்களே, அவ்வொன்பது பேர்களாவது:

1 உள்ளூராட்சி ஆணையாளர் இலாகாவின் ஆராய்வு உத்தியோகத்தர்.

2 உள்ளூராட்சியமைச்சின் நிரந்தரக் காரியதரிசி.

3 சிவில் எஞ்சினியர் தலைமையகத்தின் பரிசோதகர்.

4. வடபகுதிஉள்ளூராட்சி உதவியாணையாளர்களின் கிராமவேலையதிகாரி.

5 வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

6 வடபகுதி உள்ளூராட்சி உதவியாணையாளரின் கிராம வேலையதிகாரி.

7 பிரதம மின்சாரப் பரிசோதகர் அலுவலகத்தின் எஞ்சினியர்.

8 தலைமையகத்தின் ஆராய்வு உத்தியோகத்தர்.

9 உள்ளூராட்சித் தலைமையகத்தின் உதவியாணையாளர்,

இச்சபையைக் கலைக்க வேண்டுமென்று முன்கூட்டியே மனதிற் தீர்மானித்துக்கொண்டு அதற்கு ஏற்ற ஆதாரங்கள் தேடுவதற்காகவா ஒராண்டுகாலத்திற்குள் ஒன்பதுமுறை பரிசோதகர்களை அனுப்பிப் பரிசோதித்தார்கள். அப்படிப் பரிசோதித்தவர்கள் பிழைகள் கண்டிருந்தால் சபையைக் கலைத்திருக்கலாமே. இவர்களின் விசாரணை முடிவுகளை அறிவிக்கும்படி சபை பலமுறை கோரியிருந்தும் இதுவரை அது சம்பந்தமாக எதுவித அறிக்கையும் வெளியிடப்படவில்லை. இவ்விசாரணைகளால் அவர்களின் வேலை நேரங்கள் விரயமாவதன்றி அவர்களுக்கு வேண்டிய தகவல்களை அடிக்கடி கொடுத்துக்கொண்டிருக்க வேண்டியேற்பட்டதால் எங்கள் வழமையானவேலைகளும்தடைப்படஏதுவாகியது, இவ்வளவு குறுகிய காலத்துக்குள் இத்தனை சோதனைகளுக்கும் ஆளாகிய ஒருசபை இதுவன்றி வேறெதுவுமிருக்க முடியாது.

என். நடராசா
தலைவர்.
நகரசபை பருத்தித்துறை.

# 55 பேர் கைது

புதுடில்லி, ஆக. 30

அலகாபாத் பிரதேசத்தில் ஆபத்திலநகரில் ஏற்பட்ட பொலிஸ் மாணவர் கைகலப்பில் 55 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 13 பேர் காயமடைந்துள்ளனர்.

ஒரு சினிமா தியேட்டரில் மாணவர் ஒருவர் அனுமதிச்சீட்டு பெறுவதற்கு முயல்கையில் ஏற்பட்ட ஒரு தகராறைத் தொடர்ந்து பொலிசார் தலையிட்டனர். பின்னர்பொலிசாரை மாணவர்கள் தாக்கமுற்பட்டனர். அதன் காரணமாகவே பலர் காயமடையநேர்ந்தது

# 'பீட்டில்ஸ்' ரசிகர் சங்கம்

கொழும்பு, செவ்,

'பீட்டில்ஸ்' என்ற ஆங்கில இசைக் குழுவின் இலங்கை ஆதரவாளர்கள் கொழும்பில் இலங்கை பீட்டில்ஸ் ரசிகர்சங்கம் ஒன்றை நிறுவியுள்ளனர். அதன் கூட்டுக் காரியதரிசிகளாக ஐவன் அல்லின் ஆகிய இருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# சனசமூகநிலைய ஆண்டுவிழா

மட்டுவில், செவ்.

மட்டுவில் தெற்கு சனசமூகநிலையஓராண்டுநிறைவு விழா சமீபத்தில் நடைபெற்றது. இராஜதுரை எம். பி., மாணிக்கவாசகர் எம். பி., வி. என். நவரட்ணம் எம். பி. ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் மு. சுப்பையா, உபதலைவர்: மு. இரத்தினம், இணைக்காரியதரிசிகள்: பொ. கந்தையா, நா. கனகசிங்கம், தனாதிகாரி: வ. பத்மநாதன், உபதனாதிகாரி: வே. மயில்வாகனம், நிர்வாகிகள் மி. சிவசம்பு, ச. சரவணமுத்து, என். எலி. கிருஷ்ணன்.

# மிருகக்காட்சிசாலை அதிபர்கள் மகாநாடு

கொழும்பு, செவ்.

அக்டோபர் மாதத்தில் சர்வதேச மிருகக்காட்சிசாலைகள் டைரக்டர்கள் மகாநாடுஇலங்கையில்நடைபெறவிருக்கின்றது. உலகம் முழுவதிலும் மிருகக்காட்சிசாலைகளின் அதிபர்கள் இந்த மகாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

# போக்குவரத்து சங்கம் வரவேற்பு

கொழும்பு, செவ்

அத்தியாவசிய சேவைகளில் உள்ளவர்களுக்கென கட்டுப்படுத்தப்பட்ட அளவில் கார்களைத் தருவிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதை இலங்கை போக்குவரத்துசங்கம் வரவேற்று இருக்கின்றது.

# நாட்டிலும் நகரிலும்

இன்று மலாய் நாடு சுதந்திரம் பெற்ற தினமாகும். இலங்கைக்கும் மலாயாவுக்கும் இடையில் பலவித தொடர்புகள் இருக்கின்றன. இலங்கையைப் போலவே மலாயாவும் முறையே போத்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்டு 1957-ம் வருடம் சுதந்திரம் பெற்றது. ஆங்கிலேயர் ஆட்சியில் இலங்கையிலிருந்து, முக்கியமாக யாழ்ப்பாணத்திலிருந்து, பல இலங்கையர்கள் மலாயாவுக்குச் சென்று அங்கே ரயில்வே, பொது வேலைப்பகுதி, தபால் தந்திப் பகுதி முதலிய அரசாங்கப் பகுதிகளில் கடமையாற்றினார்கள். இவர்களுடைய உழைப்பை நம்பி இன்னும் யாழ்ப்பாணத்தில் எத்தனையோ குடும்பங்கள் வாழ்கின்றன.

மலாய் நாட்டின் ஒரு பகுதியாகிய மலாக்காவை போர்த்துக்கீசர் 1511-ம் ஆண்டு கைப்பற்றி 1641-ம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தனர். பின்பு ஒல்லாந்தர் அவர்களைக் கலைத்து விட்டு 1795-ம் ஆண்டு வரை அரசு புரிந்தனர் அதற்குப் பின் மலாயா 1957-ம் ஆண்டு வரையில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இருந்து வந்தது.

பல பிரிவுகளாக சுல்தான்களினால் ஆளப் பெற்று வந்த மலாக்கா, பினாங்கு, சிங்கப்பூர் ஆகியவற்றை ஆங்கிலேயர் ஒரு தனி நாடாக்கி, தனி ஆட்சிக்குட்படுத்தி 'ஜலசந்தி குடியேற்றம்' (ஸ்ட்ரெயிட் செட்டில்மென்ட்ஸ்) என்று பெயரிட்டனர். மலாயாவுக்கும் சுமாத்திரா தீவுக்குமிடையில் இருக்கும் நீர்ப்பரப்புக்குப் பெயர் 'மலாக்கா ஜலசந்தி. பின்னர் இந்நாட்டிற்கு 'மலாய் சமஷ்டி ராஜ்யங்கள்' (எப். எம். எஸ்.) என்ற பெயர் ஏற்பட்டது.

1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் திகதி 'மலாயா சுதந்திரம் அடைந்த நாள் முதல் அதன் பிரதம மந்திரியாய் இருந்து வருகின்ற துங்கு அப்துல் ரஹ்மானின் முயற்சியால் மலாயாவும்' சிங்கப்பூரும், சரவாக்கும், புருனேயும், வட போர்னியோவும் சேர்ந்த மலேசியா தோன்றியது. ஆனால் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதி சிங்கப்பூர் மலேசியாவை விட்டுப் பிரிந்து தனித்து இயங்குகிறது.

இந்த ஆகஸ்ட் மாதம் தென் கிழக்காசிய நாடுகள் பலவற்றிற்கு ஒரு நல்ல முழுத்தமான மாதமாகும். இந்தியாவும் பாகிஸ்தானும் 1947-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15, 14-ம் திகதிகளில் சுதந்திரம் பெற்றன. இந்தோனேஷியா 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 17-ம் திகதி ஒல்லாந்தர் பிடியிலிருந்து விலகி சுதந்திரமடைந்தது. 1957-ம் ஆண்டு ஆகஸ்ட் 31-ம் திகதி மலாயாவும், 1962-ம் ஆண்டு ஆகஸ்ட் 31-ம் திகதி தென் அமெரிக்காவைச் சேர்ந்த ட்றினிடாட், ரொபாகோ என்ற தீவுகளும் சுதந்திரம் பெற்றன.

மலேசியா நாட்டுக் குடும்பங்களின் சேர்க்கையை இந்தோனேஷிய ஜனாதிபதி (?) டாக்டர் சுகர்னோ என்ன காரணத்தினாலோ விரும்பவில்லை. அவர் அதிகாரத்தின் உச்சியிலிருந்த காலத்தில் தமது இராணுவத்தினரை மலாய் நாட்டின் மீது படையெடுப்பு செய்யும் படி தூண்டினார். அதற்கிடையில் அவருடைய வலிமை குன்ற ஆரம்பித்து

(4-ம் கலம்பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)


விட்டது. நகம், இல்லாத இழப்புலிபோல் இன்று ஆகிவிட்டார். மலேசியாவுக்கும் இந்தோனேஷியாவுக்கும் இடையில் இன்று மறுபடியும் சமூக சுபாவம் நிலவுகின்றது.

--வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயம், தொழில் துறையில் விருத்தி

## செக். நாடு காட்டும் முன்மாதிரி



அபிவிருத்தி வேலையில் ஈடுபட்டுள்ள ராட்சச யந்திரம்

செக்கோஸ்லோவாக்கியாவின் 1966-ம் ஆண்டு தை—ஆனிமாதத்திற்கான பொருளாதாரப் புள்ளி விபர அறிக்கை சமீபத்தில் வெளியாகியுள்ளது. அந்த அறிக்கையின்பிரகாரம் உற்பத்திசாதனங்கள் அபிவிருத்தி அடைந்துள்ளதால் 1965-ம் ஆண்டிலும் பார்க்க சமீபத்தில் கைத்தொழில் 8—1 நூற்றுவீதமும், கட்டிடத்தொழில் 10,0 நூற்றுவீதமும் அதிகரித்துள்ளது தெளிவாகியுள்ளது.

புதுமாதிரியான பொருளாதார நிர்வாகம் பூரணத்துவமாக அறிமுகப்படுத்தப்படாமல் இருந்தபோதிலும், நிலைமைகளின் அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்திக்கான அறிகுறிகள் தென்படுகின்றன. 38,700 கோடி கிறவுண்கள் கைத்தொழிலால் இலாபம் ஏற்பட்டுள்ளது எனப் புள்ளிவிபர அறிக்கை அறியக் கொடுக்கின்றது.

இம்முறை விவசாயத் துறையிலும், குறிப்பிடக் கூடியளவு அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. கால்நடைப் பண்ணைகளில் நிறைய அபிவிருத்தி ஏற்பட்டதுடன், சிறந்த அறுவடைக்கான நிலைமைகள் தானிய உற்பத்தியிலும் உருவாக்கப்பட்டுள்ளன. இரண்டாவது உலகயுத்தத்திற்குப் பிற்பாடு இவ்வாண்டே செக்கோஸ்லோவாக்கியாவில் விளைச்சல் மிகவும் திறமையாக இருக்கும் எனப் பூர்வாங்க நடவடிக்கைகளை அவதானிக்கும்போது துணிந்து கூறிவிடலாம்.

இவ்வருடத்தின் முதல் ஆறு மாதத்திற்கிடையில் 50,819,000 தான் நிலக்கரியும் ஏனைய எரிபொருட்களும் கிடைத்துள்ளன. சென்ற வருடத்திலும் பார்க்க இம்முறை நிலக்கரி, எரிபொருள் உற்பத்திகளில் திட்டமிட்டு செயல்பட்டதால் 98.000 தொன் அதிக நிலக்கரியும், எரிபொருளும் கிடைத்துள்ளது.

இவ்வருடம் உருக்கு, இரும்பு உற்பத்தியில் 4.8 வீதம் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக புள்ளிவிபரம் தெரியத்தருகின்றது.

உற்பத்திகள் அதிகரிக்க, மக்கள் வாழ்க்கைதரச் செலவினங்களும், சேவைகளும் அதிகரித்துக்கொண்டே யுள்ளது. அத்துடன் இவ்வருடச் சனத்தொகைக் கணக்கெடுப்பின்பிரகாரம் மொத்தச் சனத்தொகை — செக் இனத்தினர் 9,826,000, ஸ்லோவாக்கிய இனத்தினர் 4,414,000 — 14,240,000 ஆக அதிகரித்துள்ளார்கள். சென்ற வருடத்திலும் பார்க்க இவ்விடம் 46,000 மக்கள் அதிகரித்துள்ளார்கள்.


சனத்தொகை அதிகரிப்புக்கேற்ப, அரசாங்கம் 26,800 புதிய மாடிகளை வீட்டுக்காக மனுச்செய்தவர்களுக்கு வழங்கியுள்ளது. மேலும், 116,000 புதிய மாடிகள் மக்களுக்கு குடியிருப்புக்காகவழங்குவதற்கு கட்டப்பட்டுவருகின்றன.

—ஆர்

## இசையரங்கம்

சழிபுரம், செவ்வாய்

வலிகாமம் மேற்கு சன சமூகநிலையங்களின் சமாஜத்தின் இசையரங்கம் அடுத்தமாதம் 21-ந் திகதி நடைபெறவிருக்கின்றது. சமூகஜோதி சி. தியாகராசா விழாவை ஆரம்பித்துவைப்பார்.



செக்கோஸ்லவேக்கியாவில் குழந்தைகளின் நலனில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது.

## புற்றுநோய் தடுப்பு இயக்கம்

சுழிபுரம், செவ்.

'யாழ்ப்பாண மாவட்டத்தில் மலேரியா, க்ஷயரோகம் போன்ற தொற்றுநோய்கள் எப்படி மக்களை வாட்டிவதைத்தனவோ அதே போன்று இன்று புற்றுநோய் இப்பகுதி மக்களை வாட்டி அதிகம் துன்புறுத்துகின்றது. இந்நோயை முளையிலேயே நாம் தடுத்து நிறுத்தவேண்டும். இதற்காக புற்றுநோய் நிவாரண சங்கம் முழுமூச்சுடன் பாடுபடவேண்டும்' என சமூக ஜோதி சி. தியாகராசா யாழ்ப்பாணமாவட்ட புற்றுநோய் நிவாரணசங்க கூட்டத்துக்கு தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். மானிப்பாய் அதிகார்செல்லமுத்து மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில், யாழ். மாவட்டத்தில் உள்ள காரிகாதிகாரி பிரிவுகள்தோறும் கிளைச்சங்கங்களை நிறுவிப் புற்றுநோய் தடுப்புப் பிரசாரத்தை தீவிரப்படுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

# விற்பனவு நிலயத்தை விஸ்தரிக்கும் முயற்சி

## கட்டிடம் கிடைக்காததால் தாமதம்

யாழ்ப்பாணம், புதன்

அரசாங்க விற்பனவு இலாகாவின் யாழ்ப்பாண விற்பனை நிலயத்தின்சேவை பொதுமக்களுக்கு கூடுமான அளவில் கிடைக்கும் வகையில் சுண்டிக்குளிக்கு அருகாமையிலுள்ள நிலயத்தை மாற்றி பெரியகடைக்குள்ளோ அல்லது அதற்கு அருகாமையிலோ அமைப்பதற்குச் சென்றபல மாதமாக எடுத்துக்கொண்ட பிரயத்தனம் இதுவரையில் தோல்வியையே கண்டுள்ளதாக அவ் இலாகா அதிகாரி ஒருவர் மிக கவலையுடன் நமது நிருபரிடம் கூறினர்.

அரசாங்க விற்பனை இலாகாவின் சேவை யாழ்ப்பாண மக்களுக்கும் பயன்படக்கூடியதாக இருக்கச்செய்ய வேண்டுமென்று யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட பல தனிப்பட்ட நபர்களும் [illegible] ங்களும் தம்மை [illegible] கொண்டதைத் தாம் உணர்ந்துள்ளதாகவும் கட்டடங்கிச் சொந்தக்காரரின் ஒத்துழைப்பின்மையால் தாம் ஒன்றுஞ்செய்யமுடியாதநிலையில் இருப்பதாகவும் அவ்வதிகாரி கூறினர்

தற்பொழுதுள்ள தமது விற்பனை நிலயமே வெகு சீக்கிரம் மாற்றப்படவேண்டியதாக இருக்கிறதென்றும் அக்கட்டடம் மிகப் பழையதென்றும் உருக்குலையக் கூடிதொன்றென்றும் அவர் சொன்னர்.

யாழ்ப்பாணப் பொதுமக்களின் நன்மையைக் கருதி கட்டிடச் சொந்தக்காரர்கள் அரசாங்க விற்பனை இலாகாவுக்கு பெரியகடைக்கு அருகாமையில் ஒரு பொதுத் தொண்டாக எண்ணி நியாயமான வாடகையின் அடிப்படையில் கட்டிடமொன்றைக் கொடுத்துதவ முன்வருவார்களா [illegible] என்று அந்த அதிகாரி கூறினர்.

மாஜி கான்ஸ்டபிள் கொலை வழக்கு

# காரை பிணையில் விடுபடி எதிரியின் வழக்கறிஞர் வாதம்

## ஆனல் பொலிஸ் தரப்புக் கருத்தை நீதிபதி ஏற்றுக்கொண்டார்

மாவிட்டபுரம், ஞாயிறு

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை தர்மலிங்கம், பெரியவிளானைச் சேர்ந்தவர்களான சிதம்பரி மாணிக்கம், சங்கரி கந்தசாமி ஆகிய மூவரும்சென்ற மாதம் இரண்டாம் திகதி அளவெட்டி வடக்கைச் சேர்ந்தவரும் மாஜி பொலிஸ் கான்ஸ்டபிளுமான சுப்பிரமணியம் சிவகுருநாதன் என்பவரைக் கொலை செய்ததாகச் சகிகானைப் பொலிஸாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்குஎடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணை ஆரம்பமானதும் பொலிஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் நீதிபதியிடம் பொலிசார் வழக்கு ஆயத்தமில்லையென்றும், அரசாங்க பரிசோதகரின் அறிக்கை இன்னும் வராதபடியாலேயே இந்நிலையேற்பட்டது என்றும் வழக்கை வேறு ஓர் திகதிக்கு ஒத்திவைக்கும்படியும் விண்ணப்பித்தார்.

இக்கட்டத்தில் முதலாம் எதிரி தரப்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் நீதிபதியிடம் பொலிசார் இவ்வழக்குச் சம்பந்தமாகக் கைப்பற்றிப் பாதுகாவலில் வைத்திருக்கும் மோட்டார் காரை அதன் பதிவுபெற்ற சொந்தக்காரர் பிணையில் எடுத்துச்செல்ல அனுமதிக்கும்படி விண்ணப்பித்தார். இதனை பொலிஸ் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபிக்கையில் அரசாங்கப் பரிசோதகரின் அறிக்கை இன்னும் வராதபடியால் அரசாங்க பரிசோதகருக்கு மேலும் இக்கார் பரிசோதனைக்குத் தேவையோ தேவையில்லையோ என்று சொல்ல முடியாதென்றும் அரசாங்க பரிசோதகரின் அறிக்கை தந்தபின் இதைப்பற்றி யோசிக்கலாமென்ருர். நீதிபதி இதனை ஏற்றுக்கொண்டார்.

இரண்டாம், மூன்றும் எதிரிகளின் வழக்கறிஞர் நீதிபதியிடம் இவ் வழக்கில் தமது சாட்சிக்காரர்களுக்கு எதிராக எவ்வித சாட்சிகளும் இல்லையென்றும், பொலிஸார் கடந்தஇரண்டு தவணைகளிலும்எதிரிகளுக்கு எதிராகக் கோர்டில் எவ்வித சாட்சியங்களும் கொடுக்காமல் விளுகத் தவணை எடுக்கிருர்கள் என்றும் இதனுல் எதிரிகள் விளக்க மீமாண்டில் இரண்டு மாதகாலமாக இருக்கிருர்களென்றும் அவர்களைப் பிணையில் செல்ல அனுமதிக்கும்படியும் விண்ணப்பித்தார்,

நீதிபதி, பொலிஸார் அடுத்த தவணை எதிரிகளுக்கு எதிராக சாட்சியங்கள் கொண்டுவராவிட்டால் தாம் எதிரிகளைப் பிணையில் விடுவதாகவும், பொலிஸார் அரசாங்க பரிசோதகரின் பரிசோதனை அறிக்கை வந்தாலும் சரிவராவிட்டாலும் சரி அடுத்த தவணை எதிரிகளுக்குஎதிராக சாட்சியங்கள் சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதம் ஒன்பதாம் திகதி ஒத்திவைத்தார்.

முதலாம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. தி. நவரத்தினத்தின் அனுசரணையுடனும் திரு. கே. வி. என். சண்முகநாதனின் உதவியுடனும் திரு. ஏ, அமிர்தலிங்கம் ஆஜரானர். இரண்டாம் மூன்றும் எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் திரு. ...ர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர். சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. வி. செக்லையாவின் உதவியுடன் வழக்கறிஞர் எஸ். நடராசா வழக்கை நடத்திஞர்.

**வியாபாரம் பெருக விளம்பரம்செய்க**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நமது முன்னவர் இலக்கியம்

தமிழன் என்றோர்
இனமுண்டு
தனியே அவர்க்கொரு
குணமுண்டு
அமிழ்தம் அவனது
மொழியாகும்
அன்பே அவனது
வழியாகும்.

இவ்வாறு இக்காலப் புலவன் ஒருவன் பாடுகிறான். இது வெறுந் தற்புகழ்ச்சியோ, இனப்பற்றோவல்ல. உலகத்தைப்பொதுமையாக நோக்கிய பாரதிகூட "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்" என்று ஏற்கெனவே சொல்லியுள்ளான். தமிழர் என்னும் இனமும், அவர்தம் குணமும் தனித்துவமுடையவை. குணம் என்றால் தன்மையல்ல; குணமென்றால் சிறந்த பண்புடைமையையே மேற்குறிப்பிட்ட பாடல் குறிப்பிடுகின்றது. உலகத்தில் முன்தோன்றி மூத்த குடியினர் தமிழர் என்று வேற்றுமொழி ஆராய்ச்சியாளர்கூட தெளிவுபடுத்தியுள்ளனர்.

இத்தகைய சிறப்புக்குத் தமிழ்மொழியும், தமிழறிஞர்களும் உரித்தானமைக்கு அவர்தம் முன்னோர் யாத்த இலக்கியங்களே அடிப்படையாகின்றன. தமிழ்என்ற பதத்துக்குஇனிமை, தூய்மை, தனிமை என்ற கருத்துக்களுள. இக்கருத்துக்கள் வெளிப்படையாகத் தோன்றப் பண்டைய புலவர்கள் தம் கவிதைகளை யாத்துள்ளனர். தமிழ்மக்களின் வாழ்க்கை, பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. பண்பாடென்றால் சீலம் திருந்திய உணர்ச்சி, தெய்வ நம்பிக்கை, செம்மையான செந்நெறிகளைப்பேணி வாழ்கின்ற வாழ்க்கையாகும். இத்தகைய சீரிய பண்பாட்டை எப்போதும் வலியுறுத்தி, பண்பாட்டில் மக்களை நிலைகொள்ளச் செய்கின்ற தன்மையை முன்னோர் இலக்கியங்கள் அறிவுறுத்தி நிற்கின்றன.

இன்றுவாழ்வென்றால் வயிற்றை ஓம்புவதுதான்என்றே நம்மவர் கருதுகின்றனர். இத்தகைய நிலையை நாம் வாழும்காலம் வகுத்துள்ளது. நம்மவர்பலவிதமான பிரச்னைகளைசமாளிக்கவேண்டிய நிலையில் பண்பாட்டைப் பற்றிய அக்கறை சற்றுமில்லாத கோட்பாடுகளை வளர்க்க முற்பட்டுள்ளனர். சுயநலம், தன்னையும் உறவையும்மட்டுமே பாதுகாக்கின்ற குறுகிய நோக்கம் என்பவை இன்றைய வாழ்வில் முனைப்புற்று நிற்கின்றன. ஆனால் முன்னவர், பண்பாட்டை உயர்த்தவே வாழ்ந்தனர். மானத்தை உயிரென மதித்தனர்.

"மயிர்நீப்பின் உயிர்வாழாக்
கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம்வரின்"

என்னும் குறளை வகுத்த வள்ளுவன் குறளோடொட்டிய உண்மையையே அன்றைய மக்களிடத்தே கண்டான். கற்பைக் காக்கவும், கடமையைப் போற்றவும் மக்கள் வாழ்ந்தனர்; இழிநிலை காணுங்கால் தம்மை அழிக்கவும் முயன்றனர். இந்த உண்மையை இலக்கியங்கள் முழுமையும் பரக்கக்காணமுடியும்.

அன்பை வாழ்வின் அடித்தளமாக்கி, அருளின் பெற்றியினால் இன்பங்கண்டு, சீலம்பேணி திருந்திய உணர்ச்சிபெற்ற சிந்தனையாளர்கள், வாழ்வின்நிலைகொண்டு, நிலையான தத்துவத்தை மக்கள் மனதே பதித்தனர்.

உலக நாடுகளனைத்தும் முன்னேற்றம் காணுவதற்கு முன் முதிர்ந்து முற்றிய நாகரிக வாழ்க்கையை நம்மவர் அமைக்கக்காரணமாகஇருந்தவர் சீரிய உணர்ச்சிப் பேற்றை உடைய சிந்தனையாளரே. உணர்ச்சிப் பேறுவது இயற்கையாயுண்டாவது. இடையீடின்றி ஒருவன் உழைத்துழைத்து பொருளை வாரிவாரி சேர்க்கமுடியும். பொருளாற்றலால் இன்பம் பெறமுடியும். ஆயின் இவற்றினால் உணர்ச்சிப் பேறு கிடைத்து விடாது. அளவற்ற பொருளினாலோ வெறும் புத்தகப்படிப்பினாலோ ஒருவன் உணர்ச்சி பேற்றைஅடைந்துவிட முயல்வது பயனற்றது. இயற்கையான புலமையும், அருளின் மீது கொள்கின்ற நம்பிக்கையும், தெளிவான அனுபவத்துக்கூடே சிந்திக்கின்ற தன்மையும் உடையோரே உணர்ச்சிப் பேறுடையராபியர். அவர் தம்முள்ளத்தில் பெருக்கெடுத்த உணர்ச்சிப்பேறு உலகத்து மக்களுக்கு வளனும், வாழ்வும் நல்கக்கூடிய இலக்கியங்களாக உருப்பெற்றன.

வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து
வான் புகழ்கொண்ட
தமிழ்நாடு

என்று பாரதி கூறுவது புகழ்மொழியல்ல. குறளின் தன்மை உலகத்தைதக்கவர்ந்தது. குறள், உலகத்தில்பல மொழிகளிலும் பெயர்க்கப் பட்டிருப்பதிலிருந்தே அதன் சிறப்பை யாம்உணர முடியும். 'உலகமறையாகக் குறள் இலங்குகிறது' உலக வாழ்வுக்கு வேண்டிய தருமத்தைக் காட்டுவதே இலக்கியம் என்ற கருத்து வள்ளுவர் போன்ற மேதைகளிடம் விளங்கியமையாற்றான், காலத்தின் ஏலத்தால் மலிந்து விடாத கவின்மிகு இலக்கியங்களை அவர்களாற்படைக்க முடிந்தது.

இன்று இலக்கியங்கள் பல வடிவமுடையனவாகவுள்ளன. பல்வேறு திரிபுற்ற கொள்கைகளைப்போதிக்கும் சாதனமாகஇலக்கியத்தைப் பயன்படுத்துகின்றனர். வெறும் கொள்கை விளக்கங்களும், கட்சிக்கோட்பாடுகளும் பேசுகின்றனவும், பிரசார சாதனங்களும் இலக்கியமென்று பம்மாத்துச்செய்யப்படுகின்றன. குறிக்கோள் அறத்தைக்காட்டாத சிறப்பான வாழ்க்கையை உணர்த்தாத இலக்கியங்களை நம்மவர் இலக்கியமென்று கொள்ளவில்லை. இலக்கியப்படைப்பாளி தான் வாழும் காலத்தின் கண்ணாடியாக நிற்காது-காலத்தைக்கடந்துநிரகின்ற தீர்க்க சிந்தனைப் பேறுடையவனாக மிளிரா விடத்து அவனது இலக்கியம் காலத்தை வெல்லும் பலத்தை இழந்துவிடுகிறது. இத்தகைய இலக்கியங்கள் ஆக்கப்படுவதில் அர்த்தமேயில்லை. இலக்கியமென்றால் இலட்சியத்தைக் காட்டுவது என்ற கருத்து மேலோங்கா விட்டால், படைப்பவன்பலனைக் காணமுடியாது.

வேற்று நாட்டினர்தொடர்பும், காலத்தின் வேகமும் மாற்றங்களுக்குப்பசளையாகிவிட்டன. இந்தப்புதுமையான மாற்றத்தினூடே பழமையில் கால்கொண்டு-பழமைக்கும் புதுமைக்கும் புதுமையும் பாலமாகி பழமையோடு கலக்கக் கூடியதாக இலக்கியம் படைக்க நம்மவர் முற்பட்டால் மட்டுமே, இலக்கியத்தில்வெற்றி பெற்றவராவர். எத்தனையோ ஆண்டுகளுக்குப்பின்னும் வள்ளுவனும், கம்பனும், இளங்கோவும் வாழப்போகிறார்கள். முன்னே பிறந்து பின்னும் நெடுத்துச் செல்கின்ற அவர்களின் தன்மையில் ஒரு சிறிதளவாவது நம்மிடத்து இல்லையானால் நாம் என்றுமே [illegible] காணமுடியாது.

**இ. நாகராஜன்**

ஒரு கண்ணோட்டம்:

## செக்கோஸ்லோவாக்கியாவின் இலக்கிய வளர்ச்சி

செக். இலக்கியம் 15-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பூரணத்துவமான வளர்ச்சி அடைந்து விட்டது. அதன்பின்பு செக். இலக்கியத்தின் செல்வாக்கு ஸ்லோவாக்கியா இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றது. இந்த நூற்றாண்டில் செக். இலக்கியத்தில் ஜான் ஹஸ் என்ற சமூக சீர்திருத்த வாதியின் செல்வாக்கே மேலோங்கி நின்றது. 1468-ம் ஆண்டில் பொஹீமாவில் புத்தகம் அச்சிடுவது ஆரம்பமாகியது.

16-ம் நூற்றாண்டினையே செக். இலக்கியத்தின்பொற்காலம் எனக் கருதலாம். இக்காலத்தில் அனேக விஞ்ஞான, தத்துவ, வரலாற்று நூல்கள் எழுதப்பட்டன. அகராதிகள் புனையப்பட்டன.

பதினேழாம் நூற்றாண்டில் ஸ்லோவாக்கிய இலக்கியத்தின் மிகவும் முக்கிய மானவர் ஜே. ரறவொன்ஸ்கியாகும்.

1620-ம் ஆண்டிற்குப் பிற்பாடு செக். நாடு ஹாம்ஸ்பேர்க்கு வம்சத்தினரின் ஆட்சிக்குக் கீழ் வந்தபிற்பாடு, இக்காலத்தினை செக். இலக்கிய வரலாற்றின் இருண்ட காலம் என்றே வர்ணிக்கப்படும். ஹாம்ஸ்பேர்க்கு வம்சத்தினரின் கெடுபிடிகளால் செச் இலக்கிய வளர்ச்சி குன்றி, அக்காலத்தில் சிறந்த தத்துவ ஞானியும் ஆசானுமான ஜே ஏ. கோமினியஸ் போன்றோர் நாடு கடத்தப்பட்டனர்.

18-ம் நூற்றாண்டிற்கு பிற்பாடு செக்கஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளில் தேசிய விழிப்புணர்ச்சி உருவாகிக் கொள்ள இக்காலத்தில் தேசிய இலக்கிய மறுமலர்ச்சியும் உருவாகிக் கொண்டது. இவ் நூற்றாண்டின் பிற்பகுதியில் மக்கள் மத்தியில் உருவான வகுப்புணர்வு இலக்கிய வளர்ச்சியையும் பிரதிபலிக்கத் தொடங்கிற்று. இக்காலத்தில் எழுத்தாளர்கள் தங்கள் சிருஷ்டிகள் மூலம் வகுப்புணர்வினையும் புகுத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை உருவாக்க உதவினர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் செச், ஸ்லோவாக் கவிதைத் துறையில் ஒரு புதிய உணர்ச்சிப் பிரவாகம் வளர்ந்து கொள்ளத் தொடங்கிற்று. இக்காலத்தில் காறெல் ஹைபெனக் மாச்சா செக். நாட்டின் நவீன கவிதைத் துறையின் ஆதர்ச வழிகாட்டியாகத் திகழ்ந்தார். இவ் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் புதுமை இலக்கியம் எனக் கருதப்படும் யதார்த் சிருஷ்டிகள் வெளியாகத் தொடங்கின. இந்தப் புதிய பாணி புதுமை இலக்கிய எழுத்தாளர்கள் சாதாரணமான தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரது வாழ்வுகளையே மையமாக வைத்து தமது படைப்புக்களை சிருஷ்டிக்கத் தொடங்கினர்.

--கே. ரி. [illegible]

## கொத்திலிருந்து ஒரு மலர்

நமதுநாடு இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் கடந்த காலத்தைவிட இப்போது வெகு சீராக முன்னேறிவருவது கண்கூடு. புதுமை வடிவான சிறுகதையோ, கட்டுரையோ, எதுவென்றாலும், சுயத்துவ சிந்தையும், தேசியமணமும் குலவ கலைஞர்களால் படைக்கப்படுகின்றன. ஆயினும் இலக்கியத்தின் ஆதியும் ஆதாரமுமான கவிதையோ இன்று தமிழகத்தைவிட, பாரம்பரிய மரபுதழுவி-அதேவேளையில் புதுமைச் சிந்தனை பூத்துக்குலுங்க பொலிவுடன் கவிஞர்களால் யாக்கப்படுகின்றன. இன்று கவியரங்கம் இல்லா விழாக்கள் களையிழந்தவையாக அமைவதனால்- விழாஇயக்குநர்கள் கவிஞர்களை அரங்குக்குக்கொண்டுவந்து செம்மை மிகு கவிதைகளை அவர்கள் மூலம் மக்களுக்கு வழங்குகிறார்கள். அத்தகைய தேமதுரக் கவியமுதின் சேர்க்கையாக வெளிவந்திருக்கும் கவிதைத் தொகுதியிலிருந்து ஒரு கவிதை, கவிதைப் பிரியர்களுக்காகக் கீழே தரப்படுகிறது.

"காரேறிப் பூத்துக் கனநீர் பொழிந்தேரி
நீரேறிப் பூத்து நின்றுட நெற்கதிர்கள்
பேரேறிப் பூத்துப் பொலியட்டும்! திருமங்கை
தேரேறிப் பூத்துச் செழும்பவனி கொள்ளட்டும்
கூரேறிப் பூத்துக் கொங்கையரின் கற்போங்கி
வேரோடிப் பூத்து விளங்கட்டும் நல்லறங்கள்" — 'ச'

## புலவர் கூறிய உவமை

எவ்வளவு தான் வருந்திப் பிரார்த்தித்தபோதிலும் இறைவன், தாம் கேட்டதைக் கொடுக்கவில்லையே என்று பலர் நொந்துகொள்ளுகிறார்கள். அப்படி வருந்துவது தவறு. கேட்டதெல்லாம் இறைவன் கொடுக்க மாட்டான். எமது நன்மை கருதியே அவன் அப்படிச் செய்கின்றான்.

குழந்தை விரும்புவதெல்லாவற்றையும் தாய்கொடுப்பாளா? சளிச்சுரம் இருக்கும் போது, குழந்தை விரும்புகிறதே என்பதனால் வாழைப் பழம் கொடுப்பாளா? அப்படியே நோய்வாய்ப்பட்டிருக்கும் குழந்தைக்கு எது எது ஆகாதோ அதைக்கொடாள். நாமெல்லாம் இறைவனின் குழந்தைகள். இறைவன் எமது தாய்.

## கதம்ப மாலை

## பொறுக்கிய முத்து

பத்திரிகைகள் நாட்டின் கண்ணாடிபோல்வன; முகம்பார்க்கும் கண்ணாடிபோல் உண்மையான நிலையைப் பிரதிபலிக்கவேண்டும்; மூக்குக்கண்ணாடிபோல், பார்வையைத் தெளிவாக்கி நல்வழியைக் காட்டவும் வேண்டும்.

— 'கலைச் செல்வி'

## 'தேவைக்கேற்பமக்கள் உழைக்க வேண்டும்'

### இந்திய தூதுவர் கருத்து

குரும்பசிட்டி, புதன்

"மக்கள் பொதுவாக எல்லா அலுவல்களிலும் அரசாங்க உதவியை எதிர்பார்ப்பது முறையானதல்ல. தானே தனக்கு உதவி என்ற அடிப்படையில் தமது சுயதேவைகளை மக்கள் பூர்த்தி செய்தல் வேண்டும். குறிக்கப்பட்ட சில நோக்கங்கள், வேலைகள் செய்து முடிக்கப்படவே மக்கள் அரசாங்கத்தை நிறுவுகின்றனர். அந்த நோக்கங்கள் நிறைவேற மக்கள் அரசுக்கு சிறந்த ஒத்துழைப்பு அளித்து நாட்டின் தேவைகளைப் பூர்த்தியாக்குதல் வேண்டும்" இவ்வாறு இலங்கை - இந்திய ஹைகமிஷனர் டாக்டர் பீம்சென் சச்சார் குரும்பசிட்டி உதயதாரகை சனசமூகநிலையத்தினர் அளித்த வரவேற்புபசாரத்திற்கு நன்று தெரிவித்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். கிராமமுன்னேற்றச் சங்க தண்டபத்தில் திரு. தா. இளையதம்பி தலைமையில் இவ்வரவேற்புவிழா நடைபெற்றது.

திரு. சச்சார் மேலும் கூறியதாவது!

மக்களின் சுகாதார நிலை, நாட்டு முன்னேற்றத்திற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பெரிதும் பயன்படும். கடின உழைப்பின்றி பொருளாதார வளர்ச்சி சீராக மாட்டாது. தேச பாதுகாப்புக்கு பலம் பொருந்திய மக்களினால் உதவி செய்ய முடிகின்றது. இளைஞர்கள் நல்ல சிந்தனை, மனத்தூய்மை, உண்மை பேசுதல், மற்றவர்களை நேசித்தல், நீதிநியாயம் வழங்கல், அன்புஆதரவுகாட்டல் போன்ற நற்காரியங்களில் ஈடுபடுவதால் எதிர்காலத்தில் சிறந்த பதவிகளை வகிப்பதுடன் சிறந்த பிரஜைகளாகவும் திகழலாம்.

குடும்பத்தவரை நல்ல நெறி வாழ்க்கை நடாத்த உதவியளித்தல் பெண்களின் கடமையாகும்.

மேற்படி சனசமூக நிலையத்தை சுற்றிப் பார்வையிட்ட இந்தியத் தூதுவர் தாம் இன்று தமது குடும்பத்தவர் மத்தியில் இருப்பது போன்ற மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். பண்டிதர் வ. நடராஜன் நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலாங்கொடைத் தொகுதி காலியானது

## உபதேர்தலில் போட்டியிட யு. என். பி. முஸ்தீபு

கொழும்பு, செவ்.

பலாங்கொடைத்தொகுதி காலியாக உள்ளதாக கவர்னர் ஜெனரல் விசேஷ கஸட் அறிவித்தல் மூலம் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

திரு. கிளிபோர்ட் ரத்வத்தை பலாங்கொடைத் தொகுதிக்குத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதெனத் தேர்தல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை சுப்ரீம் கோர்ட் ஊர்ஜிதம்செய்ததைத் தொடர்ந்து இத்தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் நீதிமன்றத் தீர்ப்பை ஆட்சேபித்து தாம் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்போவதாக திரு. ரத்வத்தை தெரிவித்துள்ளார். எனினும் தேர்தல் வழக்குத் தீர்ப்பை ஆட்சேபித்து பிரிவிகவுன்சிலுக்கு அப்பீல் செய்ய உரிமை இல்லையென்று வழக்கறிஞர் வட்டாரங்களும் அரசியல் வட்டாரங்களும் அபிப்பிராயம் தெரிவிக்கின்றன.

**யு. என். பி. அபேட்சகர்சபை**

இதேசமயம் பலாங்கொடைத் தொகுதி உப தேர்தலில் போட்டியிடுவதற்கு யாரை அபேட்சகராகத் தெரிவு செய்வதென்பதை முடிவு செய்வதற்காக தேர்தல் அபேட்சகர் தெரிவுச்சபையொன்றை ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு தெரிவு செய்துள்ளது. இச்சபையில் பிரதமர் டட்லி சேனநாயக்கா, திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. எம். டி. பண்டா, திரு. எம். டி. எச். ஜயவர்த்தன, டாக்டர் எம். வி. பி. பீரிஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## வவனியாவில் உரத் தொழிற்சாலை வேண்டும்

### மந்திரியிடம் எம். பி. கோரிக்கை

வவனியா, செவ்வாய்

இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குள் இலங்கையில் திறமான உரத் தொழிற்சாலையொன்று நிறுவப்பட்டுவரும் என்று கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன இங்கு நடைபெறும் வவனியா மாவட் அபிவிருத்தி பொருட்காட்சியைத் திறந்துவைத்துப்பேசுகையில் கூறினர்.

மந்திரியை வரவேற்றுப் பேசிய வவனிய எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம், இலங்கையின் உணவுத் தேவைகளில் அரைப்பகுதியைப் பூர்த்தி செய்யக் கூடியநிலையில் வவனியா மாவட்டம் இருப்பதால் உணவுப் பயிர்களின் அபிவிருத்திக்குத் தேவையானதிறம் உரத்தை உற்பத்தி செய்யக்கூடிய உரத் தொழிற்சாலை வவனியாமாவட்டத்தில் நிறுவப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வவனியா மாவட்டம் விவசாயத்துறையில் சிறப்புற்று விளங்குவதாகவும் அது மேலும் அபிவிருத்தியடைவதற்கான வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் எம். பி. குறிப்பிட்டார்.

வவனியா பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ள உணவுப்பொருட்கள் மட்டும்வவனியா மாவட்டத்துக்கே போதுமானது என்று அவர் சொன்னர்.

## சைக்கிள் திருட்டு மர்மம் அம்பலம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்பாணத்தில் சைக்கிள் திருட்டில் பெருமளவில் ஈடுபட்டதாகக் கருதப்படும் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த குற்றப்பிரிவினர் கைதுசெய்து ரிமாண்டில் வைத்திருப்பதாக அறியப்படுகிறது.

மறவன்புலத்தைச் சேர்ந்த விசுவலிங்கம் பாலசிங்கம் என்பவர் இரண்டுதினங்களுக்கு முன்னர் சுன்னுகத்தில் கைதுசெய்யப்பட்டார். தாம்பலசைக்கிள்களை திருடியிருப்பதாக அவரே ஒப்புக்கொண்டதாகவும் அவர் கொடுத்த தகவலிலிருந்து நான்கு சைக்கிள்களை மீட்டுவிட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தாம் பத்து வழக்குகளில் சம்பந்தப் பட்டிருப்பதாக பாலசிங்கம் தெரிவித்திருக்கிறாராம். களவுபோனசைக்கிள்களில் இன்னும் சுமார் நாற்பது சைக்கிள்கள் விரைவில் தேடிக் கண்டுபிடித்து விடமுடியுமென பொலிசார் நம்புகின்றனர்.

### நிவாரண நிதிக்குழு

யாழ்ப்பாணம், புதன்

சமீபத்தில் யாழ்ப்பாணம் மானிப்பாய்வீதியில் சாக்கு கடையொன்றில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக ஏற்பட்டநஷ்டத்தை பொது மக்களிடமிருந்து வசூல் செய்து நிவாரணமளிப்பதற்கான ஒருகுழு நியமிக்கப் பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக திரு. டி. எஸ் இராமச்சந்திரனும், காரியதரிசியாக திரு. டி. துரைப்பாண் டியனுபொருளாளராக திரு. ம மாதவனும் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். நிர்வாக உறுப்பினர்களாகதிருவாளர்கள், கே. மாணிக்கம், ஆர். சங்கரன், பி. குருசாமி, எஸ். வி. கருப்பையா, கே. இராமசாமி, ஏ. சங்கரன் இ. பஞ்சாட்சரம், என். சங்கரய்யா ஆகியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அகில பிராமணகுரு சமூக சேவா சங்கம்

யாழ்பாணம், புதன்

அகில பிராமணகுரு சமூக சேவா சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாகக் கீழ்க்காணுபவர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்,

தலைவர் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள், உபதலைவர்கள்: தி. கி சீதாராமசாஸ்திரிகள். சி சுப்பிரமணிய ஐயர், சு. இராஜேந்திரக் குருக்கள். ச. முத்துக்குமார சுவாமிக்குருக்கள், பொதுக் காரியதரிசி: ப. வித்தியானந்தசர்மா. உதவிக் காரியதரிசி: தி. ச. தியாகராஜ ஐயர், தனாதிகாரி: நா. ச. பரமேஸ்வரக்குருக்கள், உப தனாதிகாரி: க. கணேசக் குருக்கள், கணக்குப்பரிசோதகர்: ஐ. முத்துக்குமார சுவாமிசாமிஐயர்- வித்யா காரியதரிசி: வ. சபாரத்தினக்குருக்கள், பிரசுரக்காரியதரிசி: சு. சிவசுப்பிரமணிய ஐயர், பிரசாரக்காரியதரிசி: கா. குசிவசுப்பிரமணியக்குருக்கள், அபிவிருத்திக் காரியதரிசி: சோ. சிவசுப்பிரமணிய ஐயர், ''ஞனதீபம்'' பத்திராதிபர்: க. வை. ஆத்மநாதசர்மா, பத்திரிகை நிர்வாகி- சொ. இ. சந்திரக்குருக்கள்.

### செபஸ்தியர் திருநாள்

யாழ்ப்பாணம். புதன்

பாஷையூர் துறைமுகத்திலிருந்து 5 மைல் தூரத்திலிருக்கும் மண்ணுத்தலைஎன்னுமிடத்தில்இருக்கும் அர்ச். செபஸ்தியார் கோயில் திருநாள்நாளை ஆரம்பமாகிறது, 4நாள்திகதிநடைபெறும்பாடற் பூசையுடனும் திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடனும் திருநாள் முடிவடையும். பாஷையூர் கட்டளைக்குரவர் வண. பிதா. கே. பி. சந்தியாப்பிள்ளை நாளை கொடியேற்றிவைப்பார்.

### புதிய ஜே. பி.

கொடிகாமம், செவ்.

உசனைச்சேர்ந்த திரு. கே. வி. நடராசா சாவகச்சேரிப் பகுதிக்கு புதிய சமாதான நீதிவாஞக நியமிக்கப்பட்டுள்ளார். உசன் கிராமமுன்னேற்றச்சங்கம், சனசமூக நிலையம், பெற்ருர் ஆசிரிய சங்கம் ஆகியவைகளின் தலைவராகவும் காரியதரிசியாகவும் மற்றும் சமூகஸ்தாபனங்களிலும் முக்கிய பங்கு கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம், செவ்வாய்

கோண்டாவிலைச் சேர்ந்த எஸ். தங்கலிங்கம். ஞானசேகரன் ஆகிய இருவரும் மயில்வாகனம் என்பவரை வாளால் வெட்டி படுகாயம் விளைவித்ததாக கோப்பாய் பொலிஸாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளை தலா 150 ரூபாய் பிணையில் செல்ல நேற்று யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ராஜரத்தினம் [illegible] தார். எதிரிகள் சார்பில் [illegible] ஜராஞர்.



தென்வியட்னமில் ஒரு தாய் தனது குழந்தைகளுடன் உயிரைப் பாதுகாக்கச் செல்கிறுர். இந்தக் காட்சி தென்வியட்னமில் இப்பொழுது சர்வ சாதாரணமாகக் காணப்படும் காட்சி.


வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.
தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்



தொண்டர்டங்களுக்கு வேண்டிய
பிள்ளைகளின் தைத்த உடுப்புகள்

★ நையிலேன் கவுன்
★ ரிஸ்யு கவுன்
★ கொட்டன் கவுன்
★ சன் சூட்ஸ்
★ பேபி சூட்ஸ்
★ போய் சூட்ஸ்

இன்னும் பல கண்கவர் டிசைன்களிலும்
பெற்றுக் கொள்ளலாம்

ரொலரும்ஸ்

46, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7099


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஊழல் ஒழிப்பில் பாகுபாடு இல்லை

## யு. என். பி. செயற்குழுவில் இரு பிரேரணைகள் வாபஸ்

கொழும்பு, செவ். ஐக்கியதேசியக் கட்சியின் செயற்குழு நேற்றுக் கூடிய பொழுது ஊழல் நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் கொண்டுவரப்பட்ட இரண்டு பிரேரணைகள் பிரஜைகளுக்கிடையில் பாகுபாடு காட்டுவதாக இருக்கிறது எனச் சுட்டிக்காட்டி ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாபஸ் பெறப்பட்டன.

ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும், கௌரவப்பிரஜா உரிமைபெற்ற வர்த்தகர்களின் பிரஜாஉரிமைகளை ரத்துச்செய்ய வேண்டுமென்று கோரும் பிரேரணையும் இலங்கை வம்சாவளிப் பிரஜைகளானாலும், பதிவுப் பிரஜைகளானாலும் ஊழல் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கு 7 வருடங்களுக்கு குடியியல் உரிமைகளை நிறுத்திவைக்க வேண்டுமென்று கோரும் பிரேரணையும் கொண்டு வரப்பட்டன.

இப் பிரேரணைகள் மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கௌரவப் பிரஜைகள், பதிவுப் பிரஜைகள் வம்சாவளிப் பிரஜைகள் என்போருக்கிடையில் பாகுபாடு காட்டுவதற்கான முறையில் தீர்மானங்கள் இருக்கக்கூடாதென சுட்டிக்காட்டி ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பிரேரணைகள் வாபஸ்பெறப்பட்டன.

இக் கூட்டத்தில் பிரதமர் பேசுகையில் அரசாங்கம் பொதுமக்களின் வாக்கினால் பதவிக்கு வந்தென்றும் முதலாளிமாரின் விருப்பத்துக்கிணங்க அது நடக்க முடியாதென்றும் கூறினார். ஊழல் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிக் கூறிய பிரதமர்தொடர்ந்தும் ஊழலுக்கு இடம் கொடுக்கக் கூடாதென்றும் ஊழலுக்கு அஞ்சக்கூடாதென்றும், தயவு, தயக்கம் காட்டக் கூடாதென்றும் கூறினார்.

## உணவு மந்திரி இன்று வவனியா வருகிறார்

வவனியா, செவ். உணவு விவசாயமந்திரி திரு. எம். டி. பண்டாரநாயக புதன்கிழமை வவனியாவுக்கு வருகிறார். பிற்பகல் 2-30க்கு வரும் மந்திரி பண்டா இரவு 9 மணிக்கு வவனியாவிலிருந்து கொழும்புக்குப் புறப்படுவார்.

கொழும்பிலிருந்து விமானத்தில் அனுராதபுரம் வந்து அங்கிருந்து காரில் பிற்பகல் 2-30க்கு வவனியா வந்து சேரும் மந்திரி பண்டாவை வவனியா அரசாங்க அதிபர், எம். பி., நகரசபைத் தலைவர் ஆகியோர் வரவேற்பர். வவனியாக் கச்சேரியில் பல்வேறு இலாகாத் தலைவர்களுடனும் மகாநாடு ஒன்றில் கலந்து கொள்ளும் மந்திரி பிற்பகல் 4-15 முதல் 4-40 வரை வவனியா மாவட்ட உள்ளூராட்சிமன்றத் தலைவர்களும், மாவட்ட இணைப்புக் குழுவினரும் அளிக்கும் தேநீர்விருந்திலும் கலந்து கொள்வார். மாலையில் பம்பாய் வெங்காயச் செய்கையைப் பார்வையிடுவதுடன் பம்பாய் வெங்காயக் கொள்வனவு வைபவத்திலும் வவனியா மாவட்ட பொருட்காட்சி மைதானத்தில்நடைபெறும் கூட்டுறவுதின வைபவத்திலும் கலந்துகொண்டபின் கொழும்புக்குப் பயணமாவார்.

### மனேச்சர் தேவை

இடம்: சிறுப்பிட்டி ப. நோ. கூட்டுறவுச் சங்கம். இளைப்பண்டகசாலை.

தராதரம்: S. S. C. சித்தியடைந்தவர். கூட்டுறவுப் பயிற்சியில் சித்தியடைந்தவர். நற்சாட்சிப்பத்திரம் இரண்டு.

பிணை: காசுப்பிணை ரூபா 1000/-. ஆதனப்பிணை ரூபா 2000/-.

சம்பளம்: மனேஜர் ரூபா $\frac{80X130}{10X5}$

முடிவு திகதி: 10-9-66 நண்பகல் 12 மணி. விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படவேண்டும்.

பூ. சிவசுப்பிரமணியம்
காரியதரிசி.

### காரைநகர் கி. ச. கோரிக்கை

சுழிபுரம், செவ்வாய் குடிதண்ணீர், மின்சாரம், வைத்தியசாலை, பொது ஜன நூல் நிலையம், போன்ற வசதிகளை உடன் செய்துதருமாறு காரைநகர் கிராம சபை அரசாங்கத்தைவேண்டியுள்ளது. அண்மையில் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா காரைநகர் பகுதிக்கு விஜயம் செய்தபோது காரைநகர் கிராம சபை சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் ஓர் மகஜர் மந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும் சம்பந்தப்பட்ட பகுதி இலாகாக்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் மகஜர் பிரதிகள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. முக்கிய பிரச்னையான குடிதண்ணீர் பிரச்னைபற்றி அம் மகஜரில்தெரிவிக்கப்பட்டுள்ளது. வருடாவருடம் பெப்ரவரி மாதம் தொடக்கம் அக்டோபர் மாதம் வரை கடுமையான வரட்சிஏற்படுவதால் கிராம மக்கள் குடிதண்ணீர் பெறுவதற்கு அடையும் கஷ்டம் சொல்லற்கரியது. இக்கிராமத்துக்கு வேண்டிய தண்ணீரை வெளிக்கிராமங்களில் இருந்து குழாய் மூலம் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் இதுவிஷயமாக சம்பந்தப்பட்ட இலாக்காவுடன் தொடர்புகொண்டுள்ளார்.

### அம்பாள் திருவுருவ பிரதிஷ்டை

சுழிபுரம், செவ். சுழிபுரம் பத்திரகாளி அம்மாளின் எழுந்தருளித் திருவுருவப் பிரதிஷ்டை அடுத்த மாதம் 2-ம் திகதி நண்பகல் நடைபெறவிருக்கின்றது.

### நீதிமந்திரியின் புதிய காரியதரிசி

கொழும்பு, செவ். நீதிமந்திரி திரு. ஏ. எவ். விஜயமானேயின் புதிய அந்தரங்க காரியதரிசியாக சுப்ரீம் கோர்ட் சுருக்கெழுத்தாளர் திரு. கே. வி. டி. பி. விஜேய குணரத்தின நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதம மந்திரியின் சார்பில் லண்டனில் நடைபெறும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் அடுத்தமாதம் 2 ம் திகதி நீதி மந்திரி கலந்துகொள்வதற்காகச்செல்லும்போது இவருடைய புதிய அந்தரங்கக் காரியதரிசியும் செல்கிறார்.

### சிறுமிக்கு நஷ்டஈடு எஜமானிக்கு நீதவான் உத்தரவு

இரத்தினபுரி, செவ். தான் வேலைபார்த்துவந்த ஒரு வீட்டில் அங்கு வசித்து வந்த ஒருவர் தகாதமுறையில் நடந்துகொண்டதால், உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தபோது அதனைத் தொடர்ந்து ஏஜமானியாலும் மோசமான முறையில் தாக்கப்பட்டதாக பதினைந்து வயதுப்பெண்ணின் புகாரைத்தொடர்ந்து நடந்த வழக்கில் இரத்தின [illegible] ஈடாக ரூபா 250 கொடுக்கும்படி எஜமானிக்கு உத்தரவிட்டார்.

## காமன்வெல்த் பிரதமர் மகாநாடு 6-ந்திகதி ஆரம்பம்

### ஸாம்பியா பிரதமர் போகமாட்டார்

லண்டன், ஆக. 30 லண்டனில் செப்டம்பர் மாதம் 6-ந் திகதி ஆரம்பமாகும் காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக காமன்வெல்த் நாடுகள் பலவற்றின் தலைவர்கள் லண்டன்வந்துசேரத்தொடங்கியுள்ளனர். மாலாவி பிரதமர் டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டாவும், சியாராலியோன் பிரதமரும் லண்டன் வந்து சேர்ந்துள்ளனர்.

ரொடிஷியாவில் ஸ்மித் ஆட்சியினருக்கெதிரான விஷயத்தில் பிரிட்டன் எடுக்கும் நடவடிக்கைகள் தமக்குத் திருப்தியளிக்கவில்லையெனத் தெரிவித்தவர் அந்த மகாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லையென ஸாம்பியா அதிபர் கெனத்கௌண்டாலு ஸாக்காவில் அறிவித்தார். அவருக்குப் பதிலாக ஸாம்பியா வெளிவிவகார அமைச்சர் கலந்து கொள்வார்.

இலங்கையின் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா சார்பில் நீதிமந்திரி திரு. ஏ. எப். விஜயமனே கலந்து கொள்வார். இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சார்பில் வெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண் சிங் கலந்து கொள்வார்.

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் தாம்கலந்து கொள்ளப் போவதாக மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

### கோழிக் குஞ்சுகள் விமானப்பயணம்

கொழும்பு, செவ்வாய் பிரிட்டிஷ்கம்பனியொன்றுக்கும் கொழும்பிலுள்ள கம்பெனியொன்றுக்கும் இடையில்செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இரண்டாயிரம் ஒருநாள் கோழிக் குஞ்சுகள் இன்று பிரிட்டனிலிருந்து கொழும்பு வந்துசேர்ந்தன.

### கப்பல் எங்கே?

ஹொங்கொங், ஆக. 30 தென் சீனக்கடலில் சில தினங்களுக்கு முன் காணமல் போன வர்த்தகக் கப்பலின் கதி பற்றிய தகவல் தெரியவில்லை. இக்கப்பல் மூழ்கியதற்கான அறிகுறியோ, உடைந்து போனதற்கான அறிகுறியோ தென்படவில்லை. அமெரிக்க ஏழாவது கடற்படைக் கப்பல்களும் இதைத் தேடின. ஆனால் தகவல் இல்லை.

### வல்வெட்டியில் பொன் கந்தையா நினைவு விழா

யாழ்ப்பாணம், புதன் பருத்தித்துறைத்தொகுதியின் முன்னாள் பிரதிநிதியும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவருமான காலஞ்சென்ற பொன். கந்தையாவின் நினைவு தினத்தைஅடுத்தமாதம் பதினைந்தாம் தேதி வல்வெட்டி வன்னிச்சி அம்மன் கோயில் முன்றலில் கொண்டாடுகின்றனர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பீட்டர் கெனமன், திரு. ராஜபத்திரன ஆகியோர் இவ்விழாவில் பிரதமபேச்சாளர்களாகக்கலந்துகொள்கின்றனர்.

### வால்காட் வழக்கு 7ந் திகதி தீர்ப்பு

சென்னை ஆக. 30 வால்காட் வழக்கில் செப்டம்பர் மாதம் 7-ந் திகதி தீர்ப்பு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆள்மாறாட்டம் செய்ததாகவும் கள்ள 'பாஸ்போர்ட்' தயாரித்ததாகவும் அமெரிக்கரான வால்காட் மீது தொடரப்பட்ட இவ்வழக்கு சென்னை தலைமை செசன்ஸ் நீதிபதிமுன் விசாரணை செய்யப்பட்டது.

### 400 ருத்தல் புதிய மணி!

கதிர்காமம், செவ்வாய் நானூறு ருத்தல் எடையுள்ள புதிய மணியொன்றின் ஓசை வெகுவிரைவில் கதிர்காமத்தில் ஒலிக்கப் போகிறது. கதிர்காமம் பெரிய கோவிலில் இந்த மணி அமைப்பதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. 6,000யிரம் ரூபாய் செலவில் இந்தப் புதிய மணி அமைக்கப்படவிருக்கிறது. முன்னர் மணி நிறுவப்பட்டிருந்த இடத்திலேயே இந்தப் புதிய மணி நிறுவப்படுகிறது.


### தேவை
### கம்பாஸிட்டர்கள்

அனுபவமுள்ள கம்பாஸிட்டர்கள் உடனடியாகத் தேவை. 3—9—1966-க்கு முன்னர் நேர் முகப்பரீட்சைக்கு வரலாம்.

'ஈழநாடு'
63, சிவன்கோவில் மேலை வீதி,
யாழ்ப்பாணம்.


### மரண அறிவித்தல்

**சி. கந்தையா**

கால்டக்ஸ் இலங்கை கம்பனியில் முன்பு கடமையாற்றியவரும் சிவக்கொழுந்துவின் அருமை மணவாளரும், சிவலோகநாதன் (அரசாங்க என்ஜினியரிங் கூட்டுத் தாபனம்) யோகநாதன், மீனாம்பாள், பிரகதாம்பாள் ஆகியோரின் அன்புத்தந்தையும், சி. நவரத்தினத்தின் (வவனியா கமத்தொழில் உத்தியோகத்தர்) மாமனுருமான திரு. சி. கந்தையா காலமானார். அன்னாரது பூதவுடல் இன்று 31-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் இணுவில் காங்கேசன்துறை வீதி, 'அம்பாள் வாசா' இல்லத்திலிருந்து, தகனக்கிரியைக்காக இணுவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி. 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org